
# வானவில்

# VAANAVIL

இதழ் 160 சித்திரை 2024

ISSUE 160 April 2024


# தேர்தல்களும் அரசியல் கட்சிகளின் வியூகங்களும்




இலங்கை இந்த ஆண்டிலும், அடுத்த ஆண்டிலும் இரண்டு தேர்தல்களை எதிர்நோக்கி நிற்கிறது. அதன்படி, இந்த ஆண்டு எப்படியும் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதேபோல, அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலும் நடத்தப்பட வேண்டும்.

2019 ஆம் ஆண்டு 69 இலட்சம் வாக்குகள் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவான கோத்தபாய ராஜபக்ச நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியாலும், அதனைப் பயன்படுத்தி வெளிநாட்டுச் சக்திகளின் தூண்டுதலில் 'அரகலய' என்ற பெயரில் ஏற்பட்ட கிளர்ச்சியினாலும், பதவியைத் துறக்க வேண்டிய சூழல் உருவானது. அதேநேரத்தில் பிரதமராக இருந்த அவரது சகோதரர் மகிந்த ராஜபக்சவும் முன்னதாகப் பதவி விலகியதால், சஜித் பிரேமதாச தலைமையிலான பிரதான எதிர்க்கட்சியைப் பிரதமர் பதவியை ஏற்குமாறு கோத்தபாய கேட்டு அவர்கள் மறுத்துவிட்ட சூழ்நிலையில், தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்தார் கோத்தபாய.

பின்னர் கோத்தபாயவும் தனது ஜனாதிபதி பதவியைத் துறக்க வேண்டி வந்ததால், அரசியலமைப்பு பிரகாரம் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றார். அவரது பதவியேற்பு மக்கள் அங்கீகாரம் இல்லாதது என எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வந்தாலும், அவர் அரசியலமைப்பு பிரகாரமே அந்தப் பதவிக்கு வந்தார் என்பதுடன், ஜனாதிபதி தேர்தலில் 69 இலட்சம் வாக்குகள் பெற்ற பொதுஜன பெரமுனவின் ஆதரவும், அந்தக் கட்சி அரசாங்கத்தின் ஆதரவும் அவருக்கு உண்டு என்றபடியால் எதிர்க்கட்சிகளின் வாதம் அர்த்தமில்லாததாகப் போய்விட்டது.

அரசியலமைப்பு ரீதியாக பதவி விலகிய கோத்தபாய ராஜபக்சவின் எஞ்சிய ஜனாதிபதி பதவிக் காலத்தையே ரணில் விக்கிரமசிங்க வகித்து வருகின்றார். அந்த பதவிக் காலம் இந்த வருடம் முடிவடைவதால்தான், வருடம் முடிவதற்கு முன்னர் ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டிய சூழல் எழுந்துள்ளது. அவ்வாறே நடத்துவது என ஜனாதிபதி ரணிலும் தீர்மானித்துள்ளார்.

அதேநேரத்தில், நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் நான்கரை ஆண்டுகளைக் கடந்துவிட்டால், அதைக் கலைத்துவிட்டு புதிதாகத் தேர்தல் நடத்தலாம் என்ற சட்ட விதிகள் இருப்பதால், ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்து அதற்கான தேர்தலை முதலில் நடத்தும்படி ஆளும் கட்சியான பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வலியுறுத்தி வருகின்றது. இது சம்பந்தமாக பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ச ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சில தடவைகள் சந்தித்துப் பேசினாலும் உடன்பாடு எதுவும் எட்டப்பட்டதாகத் தெரியவில்லை. திட்டமிட்டபடி ஜனாதிபதித் தேர்தலையே முதலில் (இந்த வருடம்) நடத்துவது என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி ரணில்


தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...


**நூறு சிந்தனை மலரட்டும்**

# உலகின் மிகப்பெரிய ஜனநாயகம் இந்துத்துவத்தை தோற்கடிக்குமா?

இந்தியாவின் 18வது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் ஏப்பிரல் 19ம் திகதி ஆரம்பித்துள்ளது. 543 பாராளுமன்ற உறுப்பினர்களை 28 மாநிலங்களிலும் 8 யூனியன் பிரதேசங்களிலிருந்தும் தெரிவு செய்யும் இத்தேர்தல், 7 கட்டங்களாக ஜூன் 1ம் திகதி வரையும் நடைபெறவுள்ளது. உலகிலேயே மிகப்பெரிய பாராளுமன்ற முறைமை கொண்ட ஜனநாயக நாடு, இந்தியா. இந்திய மொத்த மக்கள் தொகையில் 96.9 கோடி மக்கள் (சுமார் 70 சதவீதம்) இத்தேர்தலில் வாக்களிக்க தகுதி உடையவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1998 ஆண்டு பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக, அப்போது எதிர்க்கட்சிகளாக இருந்த பாரதிய ஜனதாக்கட்சி உள்ளிட்ட பல கட்சிகள் தேசிய ஜனநாயகக் கூட்டணி (National Democratic Alliance - NDA) என்ற பெயரில் கூட்டணியொன்றினை உருவாக்கினார்கள். அதற்குப் பின்னர் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் பா.ஜ.க. இக்கூட்டணியின் பெயரிலேயே போட்டியிட்டு வருகின்றது. நரேந்திர மோடி தலைமையிலான இக்கூட்டணி, 2014 இல் மற்றும் 2019 இல் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் வெற்றியீட்டி 10 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆட்சியில் அமர்ந்திருக்கின்றது.

2004 ஆம் ஆண்டிலிருந்து 10 ஆண்டுகாலம் மன்மோகன் சிங்கை பிரதமராகக் கொண்ட காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தது. காங்கிரஸ் கட்சி ஆட்சியை கடுமையாக விமர்ச்சித்தும், ஆர்.எஸ்.எஸ். (ராஷ்டிரிய சுயம்சேவாக் சங்கம் - Rashtriya Swayamsevak Sangh) இன் துணையுடன் இந்துமதத்தை முன்னிறுத்தியுமே மோடி ஆட்சிக்கு வந்தார். 1992 இல் அயோத்தி மசூதியை இடித்து அழித்தது, இவ்வருடம் அந்த இடத்தில் ராமர் கோவிலை நிறுவியது போன்ற செயல்களின் மூலம் இந்துமதத்தின் (967 மில்லியன் இந்தியர்களின் மதம்) ஏகபோகக் கட்சியாக பா.ஜ.க. தன்னைக் கட்டமைத்துள்ளது.

பா.ஜ.க. அரசின் மூர்க்கத்தனமான நவீன தாராளமயப் (Neoliberalism) பாதை உலகின் 3வது பெரிய பொருளாதாரமாக இந்தியாவை உயர்த்தி வருகின்றதென ஒரு சாரார் புகழ்ந்து வருகிறார்கள். ஆனால் பூகோள பசி சுட்டெண் (Global Hunger Index) குறியீட்டில் இந்தியா 111வது இடத்தில் உள்ளது என்பதை அவர்கள் கண்டு கொள்வதில்லை. அதாவது இந்தியாவில் 190 மில்லியன் மக்கள் – ஏழு பேரில் ஒருவர் – பசியால் வாடுகிறார்கள். அதேபோலவே அவர்களுக்கு, இந்தியாவின் மொத்தச் சொத்தில் 60% இற்கும் அதிகமாக 5% இந்தியர்களின் கைகளிலும், நாட்டின் மொத்தச் சொத்தில் 3% மட்டுமே இந்திய சனத்தொகையில் பாதிப்பேரின் கைகளிலும் உள்ளதென 2023 ஆம் ஆண்டு ஒக்ஸ்ஃபாம் (OXFAM 2023) அறிக்கை கூறியதும் தெரியாது.

அடையாளம் தெரியாத வகையில் கோடிக்கணக்கான பணத்தினை கட்சிகளுக்கு கொடுக்க வழிவகை செய்யும் தேர்தல் பத்திரங்கள் எனும் திட்டம், பா.ஜ.க. அரசினால் 2017 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, 2018 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. தேர்தல் செலவுகளுக்கும் ஊழல்களுக்கும் கறுப்புப்பணத்தை பயன்படுத்த வழிவகுக்கும் இந்தத் திட்டத்தின் மூலம், ஏனைய கட்சிகளைவிட பா.ஜ.கவே அதிகம் பயனடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டு காலகட்டத்தில் நன்கொடைகள் மூலம் பா.ஜ.க. பெற்ற பணம் 10122 கோடி (இந்திய ரூபா). இதில் தேர்தல் பத்திரங்கள் வாயிலாக மட்டும் 5271 கோடி பெறப்பட்டுள்ளது.

தேர்தல் பத்திரங்கள் திட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் 2017 இலும் 2018 இலும் இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இரண்டாவது மனுவினை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தாக்கல் செய்தது என்பது குறிப்பிடத்தக்கது. மறைமுகமான வழியில் பணப் பெறுதல் அரசியல் சாசனத்திற்கு எதிரானதென 15.02.2024 இல் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்து, இத்திட்டத்தை தடை செய்துள்ளது.

பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் கட்சி ஆட்சியில் 1991 ஜூலை மாதம், அப்போதைய நிதியமைச்சர் மன்மோகன் சிங் இந்தியாவில் தாராளமயமாக்கல் கொள்கையை அறிமுகம் செய்து வைத்தார். அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த எல்லா அரசுகளும் இந்தக் கொள்கையினையே பின்பற்றி வருகின்றன. இருப்பினும் தற்போதைய பா.ஜ.க. அரசில் அது பல நிலைகளை கடந்துள்ளது. பா.ஜ.கவை ஆதரித்தால் மாத்திரமே தனியார்துறை நிறுவனங்கள் இயங்கலாம் என்ற நிலையுள்ளது. மேலும் அதானி, அம்பானி உள்ளிட்ட கோர்ப்பரேட்டு நிறுவனங்களுக்கு பல முன்னுரிமைகளையும் வரிச்சலுகைகளையும் அளித்து, அந்த நிறுவனங்களின் ஆதரவில் நீண்ட நெடுங்காலம் ஆட்சி செய்ய பா.ஜ.க. திட்டமிட்டுள்ளது.

1885 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட காங்கிரஸ் கட்சி, 75 ஆண்டு கால இந்திய தேர்தல் வரலாற்றில் முன்னொருபோதும் சந்தித்திராத நெருக்கடியையும், சவாலையும் எதிர் கொண்டு நிற்கின்றது. காங்கிரஸ் கட்சியின் புகழ் பெற்ற தலைவர்களான நேரு – இந்திரா – ராஜிவின் வாரிசான ராகுல் காந்தி களத்துக்கு வந்த பின்னரான 2014, 2019 ஆம் ஆண்டு தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி படுமோசமான முறையில் தோல்விகளைத் தழுவியுள்ளது. இந்தத் தோல்விகளால் பலவீனமாக இருக்கும் காங்கிரஸ் கட்சியை, கடந்த பத்தாண்டுகளில் பா.ஜ.க. மென்மேலும் துவம்சம் செய்து வருகின்றது என்பதே உண்மை.

எல்லா எதிர்க்கட்சிகளும் ஓரணியில் திரண்டால்தான், தற்போதைய பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவைத் தோற்கடிக்கலாமென்ற முடிவுக்கு வந்த 26 எதிர்க்கட்சிகள், கடந்த ஆண்டின் நடுப்பகுதியில் காங்கிரஸ் கட்சி தலைமையில் 'இந்தியா' (Indian National Developmental Inclusive Alliance - I.N.D.I.A.) என்ற பெயரில் ஒரு கூட்டணியை உருவாக்கினார்கள். பல தடவைகள் கூடிக் கதைத்தார்கள். 400 தொகுதிகளில் பொதுவேட்பாளர்களை நிறுத்தினால், பா.ஜ.கவைத் தோற்கடித்துவிடலாம் என்றெல்லாம் 'இந்தியா' கூட்டணியின் ஆரம்ப கூட்டங்களில் பேசப்பட்டதாக செய்திகளும் வெளிவந்தன.

ஆனால் சந்தர்ப்பவாதத் தேர்தல் கூட்டணிகள் பொதுவாக நீடித்து நிலைத்து நிற்பதில்லை என்ற விதிக்கேற்ப, முதலில் 'இந்தியா' கூட்டணியிலிருந்து சிலர் பா.ஜ.கவிற்கு தாவினார்கள். பின்னர் தொகுதிப்பங்கீடுகளில் காங்கிரஸ் கட்சியுடன் ஏற்பட்ட சர்ச்சைகளால் திரிணாமூல் காங்கிரஸ், ஆம் ஆத்மி போன்ற கட்சிகள் 'இந்தியா' கூட்டணியிலிருந்து விலகி இத்தேர்தலில் தனித்துப் போட்டியிடுகின்றன. தேர்தலின் பின்னர், ஒருவேளை பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு ஆட்சியமைப்பதற்கு தேவையான 272 இடங்கள் இல்லாது போனால் தனித்துப் போட்டியிடும் கட்சிகள் மீண்டும் 'இந்தியா' கூட்டணி ஆட்சியமைப்பதற்கு ஆதரவளிப்பார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்தியக் குடியரசின் அரசமைப்புச் சட்டத்தை வகுத்தளித்த அறிஞர் அம்பேத்கர் இந்திய மக்களுக்கு விடுத்த ஓர் எச்சரிக்கையை இந்தத் தருணத்தில் நினைவுகூர்வது பொருத்தமானது: "ஆன்மீகத்தில் பக்தி என்பது முக்திக்கு உதவலாம். ஆனால், அரசியலில் அது சீரழிவை உருவாக்கி, சர்வாதிகாரத்தில் கொண்டு நிறுத்திவிடும்!"

*தொடர்பு மின்னஞ்சல் முகவரி:* sunvaanavil@gmail.com

*'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

**வானவில்**

***இணையத்தளம்:*** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.*

**சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

'வானவில்' வாசகர்கள் அனைவருக்கும் தமிழ் – சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர் குழு

# இலங்கை: சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கை, ஆனால் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்கின்றன!

இலங்கையுடன் அதிகாரிகள் மட்ட உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் (IMF) 2024 மார்ச் 21 ஆம் திகதி அறிவித்தது. அதன் அடிப்படையில் 2023 இல் ஒதுக்கப்பட்ட 3 பில்லியன் டொலர்கள் மீட்பு நிதியிலிருந்து அடுத்த கட்டத்துக்கான 337 மில்லியன் டொலர்கள் விடுவிக்கப்படும் என அது அறிவித்துள்ளது. அதிகாரிகள் மட்ட உடன்பாடு எட்டப்பட்டதானது, நாட்டை ஆட்சி செய்யும் அதிகாரிகளும் சர்வதேச நாணய நிதிய உறுப்பினர்களும் பொருளதாரக் கொள்கைகள் மற்றும் மறுசீரமைப்பு என்பனவற்றில் கவனம் செலுத்தியதை எடுத்துக் காட்டுகிறது.

மார்ச் 7 முதல் சர்வதேச நாணய நிதிய சிரேஸ்ட குழுவின் தலைவர் Peter Breuer மற்றும் பிரதித் தலைவர் Katsiaryna Svirydzenka ஆகியோர் மீட்சிக்கான (Bailout) இரண்டாவது கட்டம் பற்றி கொழும்பில் பரிசீலனை மேற்கொண்டனர். நான்கு வருடங்களுக்கான ஆரம்ப மீட்சிக்கான 2.9 பில்லியன் டொலர்களுக்கான நிதி 2023 மார்ச்சில் அங்கீகரிக்கப்பட்டது. இரண்டு கட்டங்களுக்கான தலா 330 மில்லியன் டொலர்கள் 2023 மார்ச், டிசம்பர் மாதங்களில் விடுவிக்கப்பட்டன.

சர்வதேச நாணய நிதிய முகாமைத்துவத்தின் அங்கீகாரத்தாலும், அதைத் தொடர்ந்த நிதியத்தின் நிறைவேற்றுக்குழுவின் பூரணப்படுத்தலாலும், இலங்கை அண்ணளவாக 337 மில்லியன் டொலர்களைப் பெற்றுக் கொண்டது.

1948 இல் சுதந்திரம் அடைந்த பின்னர் இலங்கை முதல் தடவையாக 2022 இல் தனது வங்குரோத்து நிலையைப் பிரகடனப்படுத்தியது.

**2022 இலங்கை கிளர்ச்சி**

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கெதிராக 2022 மார்ச்சில் 'அரகலய' (போராட்டம்) ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன. அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை கையாண்ட முறையின் காரணமாக பாரதூரமான நெருக்கடி உருவானது சம்பந்தமாக விமர்சனங்கள் உருவாகின. பணவீக்கம், மின்வெட்டு, எண்ணெய் மற்றும் எரிவாயு உட்பட அத்தியாவசியப் பொருட்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு என்பன காரணமாக பெரும் அமைதியின்மை உருவாகியது.




பெரும் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக இலங்கை அரசாங்கம் 2022 யூலை 13 இல் கவிழ்ந்தது. கணிசமான ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸவின் இல்லத்துக்கு அணிவகுத்துச் சென்று அவரைப் பதவி விலகும்படி கேட்டுக் கொண்டனர். ராஜபக்ஸ நாட்டை விட்டு வெளியேறி மாலைதீவு செல்ல, பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க அவருடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டார். சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு வழிவிடுவதற்காக அன்று மாலை பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலகினார்.

*வியா பிரான்ஜால் பான்டே*
(Via Pranjal Pandey)

முன்னர் ஐந்து தடவைகள் நாட்டின் பிரதமராகவும், பிரதி ஜனாதிபதியாகவும் பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க, 2022 யூலை 20 இல் பாராளுமன்றத்தில் நடந்த வாக்களிப்பின் மூலம் நாட்டின் எட்டாவது நிறைவேற்று ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

**இலங்கையின் பொருளாதார நெருக்கடி**

நாட்டில் ஏற்கெனவே நிலவிய உணவுப் பாதுகாப்பின்மை காரணமாக இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்திருந்தது. ஐ.நா. சிறுவர் நிதியம் (UNICEF) தெரிவித்ததின்படி நாட்டின் சனத்தொகையில் 28 சதவீதமான 6.2 மில்லியன் மக்கள் உணவுப் பாதுகாப்பின்மையில் இருந்தனர். அத்துடன் மேலும் 66,000 பேர் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்நோக்கியிருந்தனர்.

பணவீக்கத்தாலும், நீண்ட அரசியல் நெருக்கடியாலும் உருவான நிலைமை இலங்கையின் ஆட்சிமுறையை மறுவடிவம் எடுக்க வைத்து சமூகங்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. 2019 இல் ஒருவர் தனது வருவாயில் 32 சதவீதத்தை உணவுக்காக செலவிட்ட நிலை மாறி 2022 இல் 75 வீதத்தை செலவிட வேண்டிய நிலை வந்துவிட்டது. இந்த நெருக்கடியால் 86 வீதமான சாதாரண தொழிலாளர்களின் குடும்பங்கள் தமது உணவுத் தேவையைக் குறைக்க வேண்டி வந்ததுடன், சிலர் உணவு உள்கொள்வதை நிறுத்த வேண்டியும் ஏற்பட்டது.

விவசாயத்தில் தங்கியிருந்த நாட்டின் சனத்தொகையில் 26.41 சதவீதமானவர்கள் உணவு உற்பத்தியில் ஈடுபட முடியாமல் போனமையே உணவுப் பாதுகாப்பின்மை ஏற்படுவதற்கு காரணமாகும். இயற்கை விவசாயத்துக்கு மாறியமை வெற்றிகரமாக அமையாமையே உள்ளூர் விவசாயம் வீழ்ச்சியடைந்ததற்கான காரணம் என மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ.நாவின் ஒருங்கிணைப்பு மதிப்பீட்டு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. 2021 ஏப்ரலில் முன்னைய அரசாங்கத்தால் இரசாயன உரங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நொவம்பரில் நீக்கப்பட்ட போதிலும், காலபோக மற்றும் சிறுபோக வேளாண்மை 40 முதல் 50 வீதம்

வரை குறைவாகவே இருந்தது.

மூன்றில் இரண்டு குடும்பங்கள் தமது பிள்ளைகளின் உணவுப் பழக்கத்தை நெருக்கடி நிலையின் போது மாற்றியமைத்திருந்தன. குழந்தைகளில் அரைவாசிப்பேர் (54 சதவீதம்) மலிவான அல்லது தரம் குறைந்த உணவையே உட்கொண்டனர். மூன்றிலொரு பகுதியினர் (35 வீதம்) தமது குழந்தைகள் உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைத்திருந்தனர். பத்து குழந்தைகளில் ஒருவர் (12 வீதம்) உட்கொள்ளும் உணவின் அளவை அடிக்கடி குறைத்தனர்.

2022 இல் இலங்கையில் 15 இல் இருந்து 24 வயது வரையிலான வேலையற்றவர்களின் வீதம் 24 ஆக இருந்தது. 2019 இல் 11.3 சத வீதமாக இருந்த வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களின் தொகை 2020 இல் 12.7 வீதம் ஆக அதிகரித்தது. அந்தக் காலகட்டத்தில் மேலுமொரு 300,000 பேர் புதிதாக வறுமைக்கோட்டின் கீழ் சேர்ந்து கொண்டனர். இந்த நிலைமை தொடர்ந்து 2021 மற்றும் 2022 காலகட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களின் தொகை 13.1 வீதத்திலிருந்து 25 வீதமாகி இரு மடங்காகியது. இந்த அதிகரிப்பு 2022 இல் மட்டும் 2.5 மில்லியன் பேரை மேலதிகமாக வறுமைக்கோட்டின் கீழ் தள்ளியது. இந்தப் பொருளாதார நெருக்கடியால் பொருட்களின் விலைகள் 46 வீதம் வரை உயர்வடைந்து குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகின.

**சிக்கன நடவடிக்கைகளும் சர்வதேச நாணய நிதியமும்**

நாணய நிதியத்தின் ஆலோசனைகள் இலங்கை மக்கள் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சிக்கன நடவடிக்கைகளும் அமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்களும் பொதுச் செலவீனத்தை வெட்டி, வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரித்து, அத்தியாவசிய சேவைகளைக் குறைத்துள்ளது. தனியார்மயப்படுத்தலும் மீள் ஒழுங்கமைப்பும் அத்தியாவசிய சேவைகளின் செலவை அதிகரித்து, வறுமையையும் சமத்துவமின்மையையும் அதிகரித்துள்ளது. இந்த ஆலோசனைகள் (நிதியத்தின்) குறுகிய கால நிதியுதவியை வழங்கினாலும், இலங்கையிலுள்ள சமூகங்களுக்கு நீண்ட கால சமூகக் கஸ்டங்களை ஆழப்படுத்தும்.

மீட்சிக்கான ஆலோசனைகளின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் எடுத்து வரும் தொடர்ச்சியான நடவடிக்கைகள் நாட்டில் பாரதூரமான பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி, மக்களுக்கு பெரும் சவால்களை ஏற்படுத்தும். இந்தச் சிக்கன நடவடிக்கைகள் அத்தியாவசிய பொதுச்சேவைகள், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள், பொது சுகாதார சேவை மற்றும் கல்வித்துறை என்பன உட்பட அரசாங்கத்தின் பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்களவு செலவுகளைக் குறைத்து மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். குறிப்பாக ஒவ்வொரு அமைச்சினதும் வருடாந்த செலவீனம் 5 சதவீதத்தால் குறைக்கப்படும்.

இந்த வெட்டுகளால் இலங்கை வரி அமைப்புமுறை நெருக்கடியான நிலைமைக்கு உள்ளாகும். 80 சதவீதமான வரி வருவாய் பெறுமதி சேர் வரி (VAT) என்பதிலேயே தங்கி நிற்கும். இதனால் உயர் வருமானம் பெறுபவர்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த வருமானம் பெறுவோர் அதிக தொகையைச் செலுத்த நேரும்.

அத்துடன் சிக்கன நடவடிக்கைகளில் ஒன்றாக அரசாங்க நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள முடிவு, ஊழியர்களுக்கும் பயனாளர்களுக்கும் எதிர்மறையான தாக்கத்தை உண்டு பண்ணுவதுடன், வேலை இழப்புகளுக்கு இட்டுச் சென்று, அத்தியாவசிய சேவைகளிலும் குறைப்பை ஏற்படுத்தும். அதேபோல, சமீபத்தில் தொழிலாளர் "இணக்கப்பாடு" என்ற பொருளாதார கொள்கை முன்னெடுப்புகளின் விளைவாக தொழிலாளர்களின் உரிமைகள், நலனோன்பு, வருமானம் என்பனவற்றில் பாதிப்புகளை ஏற்படுத்துவதுடன், தொழிலாளர்கள் சுரண்டப்படுவதும் அதிகரிக்கும்.

மேலும், ஓய்வூதியத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள், அதாவது ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியத்துக்கு செலுத்தப்படும் தொகை குறைக்கப்பட்டதானது, அவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். குறிப்பாக தமது வாழ்க்கைத் தேவைக்கு நிலையான வைப்பில் தங்கியிருப்பவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

மத்திய வங்கியின் இறுக்கமான நிதிக் கொள்ளை நிலைப்பாடு, கடன் பெறும் கைத்தொழில்களுக்கும், பாவனையாளர்களுக்கும் பாதிப்பை உண்டுபண்ணுவதுடன், பொருளாதார நடவடிக்கைகளிலும் பாவனையாளர் செலவுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

(இந்தப் பத்தி Left Chapter என்ற இணையத்தளத்தில் வந்த கட்டுரையொன்றின் சுருக்கமாகும்)

**16ம் பக்கத்தொடர்ச்சி...**

உள்ளது. துறைமுக நகரம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் நிதி, குடியிருப்பு, பொழுதுபோக்கு கேந்திரமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

Price Waterhouse Coopers Consulting நிறுவனத்தின் கூற்றை மேற்கோள் காட்டிய சின்குவா செய்தி நிறுவனம் (Xinhua News Agency) இந்தத் திட்டம் 9.7 பில்லியன் டொலர்கள் நேரடி முதலீட்டைக் கவர்ந்துள்ளதுடன், 5 பில்லியன் டொலர்களுக்கும் மேற்பட்ட வரி வருமானத்தையும் இலங்கைக்கு வழங்கும். அத்துடன், நான்கு இலட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்களுக்கு தரமான வேலை வாய்ப்பையும் வழங்கும்.

சீனாவின் சர்வதேச அபிவிருத்தி நிதியத்துக்குப் போட்டியாக அமெரிக்கா இலங்கை துறைமுகத்தில் 553 மில்லியன் டொலர்கள் செலவில் ஆழ்கடல் கொள்கலன் முனையமொன்றை (Deep-Water Container Terminal) அமைக்கவுள்ளதாக 2023இல் அறிவிக்கப்பட்டுள்ளதாக 'அசோசியேட்டட் பிரெஸ்' (Associated Press) கூறுகின்றது.

இலங்கை சாதகமான புவியியல் அமைவிடமும், நல்ல இயற்கை வளங்களும் கொண்ட நாடு. எனவே இந்தத் தீவு, தனது இயற்கை வளங்களைப் பூரணமாகப் பயன்படுத்தி வர்த்தகத்தை வளர்த்துக் கொள்ளவும், வெளிநாட்டு மூலதனத்தைக் கவர்ந்திழுக்கவும் முடியும்.

இந்த நிலைமையில், துரிதமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதே இந்த நெருக்கடியான நேரத்தில் தேவையாகும். இலங்கை நல்ல முயற்சிகளை எடுத்து, துரிதமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தினால், வேலைவாய்ப்பை அதிகரித்து, வரி வருமானங்களை கூட்டுவதுடன், அதன் கடன் சுமையும் குறைவடையும்.

(இந்தக் கட்டுரை சீனாவிலிருந்து வெளியாகும் Global Times பத்திரிகையில் வெளிவந்ததாகும்)

# மாஓவுக்கும் சேகுவேராவுக்கும் இடையிலான உரையாடல்!

கியூப புரட்சி வெற்றி பெற்றது 1959 ஆம் ஆண்டாகும். அடுத்த ஆண்டு, அதாவது 1960 இல் சே குவேரா தலைமையில் கியூப அரச தூதுக்குழு ஒன்று சீனா சென்றது. சே குவேரா அப்பொழுது கியூப தேசிய அபிவிருத்தி வங்கியின் தலைவராக இருந்தார்.

அங்கு 1960 நொவம்பர் 19 ஆம் திகதி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் மாஓ சேதுங் தலைமையிலான சீனத் தோழர்களைச் சந்தித்து கியூபக்குழு பேச்சுவார்த்தை நடத்தியது.

மாஓ தலைமையிலான சீனத் தூதுக்குழுவில் பிரதமர் சௌ என்லாய் (Zhou Enlai) மற்றும் கட்சியின் முக்கிய தலைவர்களான லி ஸியன்நியன் (Li Xiannian), கெங் பியாஓ (Geng Biao), ஸென் ஜியான் (Shen Jian), லின் பிங் (Lin Ping) ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

பேச்சுவார்த்தையின் விபரம் வருமாறு:

**தலைவர் மாஓ சேதுங்:** கியூப தூதுக்குழுவினரே வருக.

**(ஏர்னெஸ்ரோ) "சே" குவேரா:** தலைவர் மாஓவினால் வாழ்த்துப் பெற்றது எங்களுக்கு மகிழ்ச்சியான ஒரு விடயம். எமது போராட்டத்தில் மாஓவின் ஆதரவை நாம் எப்பொழுதும் மதிக்கிறோம். நாங்கள் உத்தியோகபூர்வமாக கியூபாவை பிரதிநிதித்துவப்படுத்தும் தூதுக்குழு என்ற போதிலும், எமது தூதுக்குழுவில் உள்ளவர்கள் நான்கு வெவ்வேறு நாடுகளில் பிறந்தவர்கள்.

**மாஓ:** நீங்கள் ஆர்ஜன்ரைன்காரர்.

**குவேரா:** ஆர்ஜன்ரைனாவில் பிறந்தேன்.

**மாஓ:** தூதுக்குழுவில் உள்ள மற்றையவர்கள் எங்கே பிறந்தவர்கள்?

**குவேரா:** (Ramiro Fernando) Maldonado ஈகுவடோர் புரட்சிகர சோசலிச கட்சியின் செயலாளர் நாயகம், பொருளியலாளர் (Alban) Lataste சிலி நாட்டைச் சேர்ந்தவர். ஏனையோர் கியூபாவில் பிறந்தவர்கள். எங்களில் சிலர் கியூபாவில் பிறந்தவர்கள் இல்லாவிடினும் கியூபப் புரட்சியைப் பாதுகாப்பவர்கள். அதேநேரத்தில் ஃபிடல் கஸ்ட்ரோ எல்லா இலத்தீன் அமெரிக்கர்களையும் பிரதிநிதித்துவம்



செய்கின்றார்.

**மாஓ:** நீங்கள் சர்வதேசியத்துவவாதிகள்.

**குவேரா:** லத்தீன் அமெரிக்காவின் சர்வதேசியத்துவவாதிகள்.

**மாஓ:** ஆசிய மக்கள், ஆபிரிக்க மக்கள் மற்றும் முழு சோசலிச முகாமும் உங்களை ஆதரிக்கிறது. கடந்த ஆண்டு நீங்கள் சில ஆசிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டீர்கள்.

**குவேரா:** இந்தியா, சீயம் (தாய்லாந்து), இந்தோனேசியா, பர்மா, யப்பான், பாகிஸ்தான் போன்ற சில நாடுகளுக்கு.

**மாஓ:** சீனாவைத் தவிர ஏனைய பிரதான ஆசிய நாடுகளுக்கு.

**குவேரா:** அதனால்தான் இப்பொழுது சீனாவுக்கு வந்துள்ளேன்.

**மாஓ:** உங்களை வரவேற்கிறோம்.

**குவேரா:** கடந்த வருடம் நான் கியூபாவை விட்டுப் புறப்படுகையில் எமது உள்நாட்டு நிலைமை ஸ்திரமடைந்துள்ளது. உள்நாட்டு நிலைமை ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளதால் நாம் ஸ்திரமாக இருக்கின்றோம். அதனால் இப்பொழுது போலல்லாமல் வெளிநாட்டு நிலைமையை நாம் கவனமாகக் கையாள வேண்யுள்ளது.

**மாஓ:** தற்போதைய சர்வதேச நிலவரம் கடந்த ஆண்டை விட சிறப்பாக உள்ளது.

**குவேரா:** முழு நாடும் ஐக்கியப்பட்டுள்ளது. ஆனால் ஏகாதிபத்தியவாதிகள் எம்மைப் பிளவுபடுத்துவதற்கு ஒவ்வொரு நாளும் முயற்சிக்கின்றனர்.

**மாஓ:** தொழிலாளர்கள் விவசாயிகளுடன் வேறு யாரையெல்லாம் நீங்கள் ஐக்கியப்படுத்தியிருக்கிறீர்கள்?

**குவேரா:** எமது அரசாங்கம் தொழிலாளர்கள் விவசாயிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. எமது நாட்டில் இன்னமும் குட்டி முதலாளித்துவ சக்திகள் இருப்பதால், அவர்களுடன் நாம் நட்புறவைக் கொண்டிருப்பதுடன், அவர்கள் எம்முடன் ஒத்துழைக்கிறார்கள்.

**மாஓ:** தேசிய முதலாளித்துவ வர்க்கம் இல்லையா?

**குவேரா:** தேசிய முதலாளித்துவ வர்க்கம் அடிப்படையில் இறக்குமதியாளர்கள். அவர்களது நலன்கள் ஏகாதிபத்தியத்துடன்

பிணைந்திருப்பதுடன், அவர்கள் எமக்கு எதிராகவும் இருக்கிறார்கள். நாங்கள் அவர்களை பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஒழித்துக் கட்டியுள்ளோம்.

**மாலு:** அங்கு தரகு முதலாளித்துவ வர்க்கம் எப்படி?

**குவேரா:** சிலர் முழுமையாக ஏகாதிபத்தியத்தில் தங்கியுள்ளனர். ஏகாதிபத்தியம் அவர்களுக்கு மூலதனம், தொழில்நுட்பம், அனுசரணை, சந்தை வாய்ப்புகள் என்பனவற்றை வழங்குகிறது. அவர்கள் தமது சொந்த நாட்டில் வாழ்ந்தபோதும், அவர்களது நலன்கள் ஏகாதிபத்தியத்துடன் இணைந்துள்ளன. உதாரணத்துக்கு சீனி வர்த்தகர்கள். தற்பொழுது சீனி வர்த்தகம் தேசியமயமாக்கப்பட்டுள்ளது.

**மாலு:** நீங்கள் அடிப்படையில் எல்லா அமெரிக்க மூலதனத்தையும் கையகப்படுத்திவிட்டீர்கள்.

**குவேரா:** அடிப்படையில் அல்ல, ஆனால் எல்லாவற்றையும். சில மூலதனங்கள் தப்பி விட்டன. ஆனால் அவை நாம் வேண்டாதன.

**மாலு:** நீங்கள் அவற்றுக்கு இழப்பீடு வழங்கினீர்களா?

**குவேரா:** ஒரு சீனி கொம்பனி கையகப்படுத்தலுக்கு முன்னர் எம்மிடம் இருந்து மூன்று மில்லியன் தொன்னுக்கு மேலே சீனி கொள்முதல் செய்திருந்தால் மொத்தப் பெறுமதியில் 5 முதல் 25 சதவீதம் இழப்பீடு வழங்கப்பட்டது.

**மாலு:** சில ஏகாதிபத்திய கொம்பனிகள் தந்திரோபாய ரீதியாக இதை ஏற்றுக் கொள்கின்றன. எங்களுக்கும் கூட சில அப்படி உண்டு.

**பிரதமர் சௌ என்லாய்:** HSBC (Hong Kong and Shanghai Banking Company) போன்று. அது ஒரு அடையாளம் நிமித்தமாக.

**குவேரா:** கியூபாவில் உள்ள கனடிய வங்கிகள் HSBC போன்றவைதான்.

**மாலு:** உங்களுக்கு எதிரானவர்கள் உங்கள் எதிரிகள். இந்த எதிர்ப் – புரட்சிவாதிகளை அடக்கியதின் மூலம் நீங்கள் மகத்தான பணியைச் செய்திருக்கிறீர்கள்.

**குவேரா:** எதிர்ப் – புரட்சிவாதிகள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைச் செய்துள்ளனர். உதாரணமாக, அவர்கள் சில வேளைகளில் சில தீவுகளை ஆக்கிரமித்துள்ளனர். ஆனால் அவர்கள் உடனடியாகவே நசுக்கப்பட்டுவிட்டனர். அவர்களது தலைவர் பிடிபட்டபொழுது அவரைச் சுட்டுக் கொன்றோம். இதில் கவலைப்பட ஏதுமில்லை. அவர்களுடைய எல்லா உபகரணங்களும் அமெரிக்காவிலிருந்து பரசூட் மூலம் இறக்கப்பட்டவையாகும்.

**மாலு:** நீங்கள் பல அமெரிக்கர்களையும் பிடித்தீர்கள்.

**குவேரா:** அவர்கள் உடனடியாகப் பிடிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

**பிரதமர் சௌ என்லாய்:** அமெரிக்க அரசாங்கம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நீங்கள் பதில் அளித்தீர்கள்.

**மாலு:** நீங்கள் உறுதியாக உள்ளீர்கள். புரட்சியில் இறுதிவரை உறுதியாக இருக்கும் நம்பிக்கை இருக்க வேண்டும். ஏகாதிபத்தியம் பெரும் நெருக்கடியில் உள்ளது. ஆனால் அதை இலகுவாக்குவதற்காக அது சமரசத்தை நாடவும் கூடும்.

**குவேரா:** புரட்சியின் முதல் கட்டத்தில் எல்லோருக்கும் ஒரு வீடு இருக்க வேண்டும் என்ற கடப்பாட்டின் காரணமாக இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு வழிமுறையை ஃபிடல் பிரேரித்தார். நாம் பெரும் வீட்டு உரிமையாளர்களின் சொத்துகளைச் சுவீகரித்து அவற்றை மக்களுக்கு விநியோகித்தோம். சிறிய வீட்டு உரிமையாளர்கள் வழமைபோல தமது சொத்துகளை வைத்திருக்க அனுமதிக்கப்பட்டனர்.

**மாலு:** பிறகு?

**குவேரா:** இப்பொழுது நாம் புரட்சியின் இரண்டாவது கட்டத்தில் இருக்கிறோம். உதாரணமாக, ஒரு மனிதன் இன்னொரு மனிதனை சுரண்டுவதை ஒழித்துக் கட்டுவது, உள்நாட்டு மற்றும் சர்வதேச சூழ்நிலைகளை நன்கு அவதானித்து எமது ஆட்சியை ஸ்திரப்படுத்துவது, கல்வியறிவின்மையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழித்துக் கட்டுவது, கைத்தொழில்துறையை அபிவிருத்தி செய்வது மற்றும் நிலச் சீர்திருத்தத்தைத் தொடர்வது என்பனவே அவை.

**மாலு:** சிறப்பு. இலத்தீன் அமெரிக்காவில் மட்டுமின்றி, ஆசியா மற்றும் ஆபிரிக்காவிலும் நீங்கள் செல்வாக்கு செலுத்தியுள்ளீர்கள். உங்களது சிறப்பான செய்கைகளால் நீண்ட காலமாக அவர்கள் மீது செல்வாக்கு செலுத்தியுள்ளீர்கள்.

**குவேரா:** குறிப்பாக லத்தீன் அமெரிக்காவில்.

**மாலு:** லத்தீன் அமெரிக்காவில் உள்ள குட்டி முதலாளித்துவ மற்றும் தேசிய முதலாளித்துவ சக்திகள் சோசலிசத்தைக் கண்டு பயப்பிடுகின்றனர். எனவே, ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு நீங்கள் சமூக மாற்றத்துக்கு அவசரப்படாதீர்கள். இந்த அணுகுமுறை லத்தீன் அமெரிக்காவிலுள்ள குட்டி முதலாளித்துவ மற்றும் தேசிய முதலாளித்துவ சக்திகளை வென்றெடுக்க நன்மை பயக்கும். புரட்சி வெற்றி பெற்ற பின்னர் நாங்கள் முன்னர் ஜேர்மனி, இத்தாலி, யப்பான் ஆகியவற்றின் வர்த்தகங்களாக இருந்து பின்னர் சியாங்கே ஷேக்கின் வர்த்தகங்களாக மாறியவற்றை தேசியமயமாக்கிய பின்னர், முழு கைத்தொழில் மூலதனத்திலும் அது 80 சதவீதமாக இருந்ததுடன், தேசிய முதலாளித்துவத்தின் சொத்து 20 வீதமாக மட்டுமே இருந்தது. அவர்கள் மில்லியனுக்கு மேற்பட்ட தொழிலாளர்களை வைத்திருந்ததுடன், முழு வர்த்தக வலையமைப்பையும் கட்டுப்படுத்தினார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எமக்கு 7 வருடங்கள் பிடித்தது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்குடன் நாம், அவர்களுக்கு வேலை, வாக்களிக்கும் உரிமை, தனியார் – பொது நிறுவன கூட்டு முகாமைத்துவம், வட்டி என்பனவற்றை வழங்கினோம். இந்தத் தீர்மானம் அவர்களுக்கு திருப்தியைத் தந்ததுடன், வெளிநாடுகளிலும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தத் தீர்வை திரும்பிப் பார்க்கையில், ஆசிய முதலாளித்துவத்தை முழுமையாகத் திருப்திப்படுத்தாவிடினும், இது அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு அவர்களை ஐக்கியப்படுத்தியதுடன், கொள்கையடிப்படையில் சிறந்ததாகவும் இருந்தது.

**குவேரா:** நாங்கள் மற்றைய நாடுகளிடமிருந்து, சீனா உட்பட ஏனைய சோசலிச நாடுகளிடமிருந்து அனுபவங்களைப் பெற வேண்டும். நாங்கள் அவர்களுக்கு (முதலாளித்துவ சக்திகளுக்கு) வெளிநாடுகளுக்குப் போகாதிருப்பதற்காக மதிப்பு, வேலை, பணம் போன்றவற்றை வழங்கினோம்.

தொழில்நுட்பவியலாளர்களுக்குக் கூட சம்பளம் வழங்கினோம். வேலையற்றவர்களை நாம் கூட்டுறவு அமைப்புகளில் ஐக்கியப்படுத்தி வேலை வழங்கினோம்.

**மாஓ:** அமெரிக்கா, தேசிய முதலாளித்துவ சக்திகள் கியூபாவில் இருப்பதை விரும்பவில்லை. கொரியாவிலும், சீனாவின் மஞ்சூரியா பகுதியிலும் யப்பானின் நிலையும் இதுதான். வியட்நாமில் பிரான்சின் நிலையும் இதுதான். அவர்கள் உள்ளூர் மக்கள் பெரிய வேலைத்தலங்களை உருவாக்குவதை அனுமதிப்பதில்லை.

**குவேரா:** இதன் அடிப்படையில் என்ன நடக்கிறது இலத்தீன் அமெரிக்காவில்? நிலப்பிரபுத்துவம் அழிக்கப்பட்ட பின்பு தேசிய முதலாளித்துவத்துக்கு ஏகாதிபத்தியம் ஆதரவு காட்டுகிறது. தேசிய முதலாளித்துவம் இறக்குமதி வரியை அதிகரிக்கும்படி கேட்கிறது. ஆனால் அவர்கள் தேசிய நலன்களின் பக்கம் நிற்பதில்லை. அவர்கள் ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேர்ந்து கொள்கிறார்கள்.

**மாஓ:** கியூபா மற்றைய இலத்தீன் அமெரிக்க நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளைக் கொண்டுள்ளதா?

**குவேரா:** பல நாடுகள் ஒன்றோடு ஒன்று இணைந்துள்ளதுடன், கியூபாவுடனான உறவுகளை நிறுத்தியுள்ளன. அந்த நாடுகள் ஆவன: கெயிற்றி, டொமினிக்கன் குடியரசு, கௌத்தமாலா, கொலம்பியா, எல் சல்வடோர், ஹொண்டுராஸ் என்பன இணைந்து கியூப தூதுவரை நிறுத்தியுள்ளன. பிரேசில் தனது தூதுவரை வேறு காரணங்களுக்காக திருப்பி அழைத்துள்ளது.

**பிரதமர் சௌ என்லாய்:** அப்படியானால் ஏழு நாடுகள்.

**மாஓ:** லத்தீன் அமெரிக்காவிலுள்ள 19 நாடுகளில் 7 நாடுகள் போக மிகுதி 12 நாடுகளுடன் கியூபா உறவுகளைக் கொண்டுள்ளது.

(இந்தக் கட்டத்தில் மாஓ கியூபத் தூதுக்குழுவை இரவுப் போசனத்துக்கு அழைக்கிறார். இருப்பினும் அவர்களது உரையாடல் தொடர்கிறது)

**குவேரா:** என்னை ஆகர்சித்த இரண்டு விடயங்கள் சீனாவுக்கும் கியூபாவுக்கும் இடையே இருக்கின்றன. நீங்கள்



புரட்சியை அரங்கேற்றிக் கொண்டிருக்கையில் சியாங்கே ஸேக் உங்களைத் தாக்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர் “சுற்றிவளைப்பு”, “அடக்குவது” என்ற இரண்டு சொற்களைப் பயன்படுத்தினார். இந்தச் சொற்கள் பிற்போக்குவாதிகளால் எங்கள் மீதும் பிரயோகிக்கப்பட்டது. அவர்கள் பயன்படுத்தும் தந்திரோபாயம் ஒன்றுதான்.

**மாஓ:** யுத்தம் ஆரம்பித்ததும் அது 10 ஆண்டுகள் நீடித்தது. நாங்கள் தளப்பிரதேசங்களை உருவாக்கியிருந்த போதிலும், வலது சந்தர்ப்பவாதத் தவறை இழைத்ததால் அவற்றை இழந்து, நீண்ட பயணத்தில் தூரப்போக வேண்டி ஏற்பட்டது. அடிப்படையில் வலதுசாரி ~ இடதுசாரி சந்தர்ப்பவாதம் என்ற இரண்டு தவறுகளை இழைத்து அதிலிருந்து பாடம் கற்றுக் கொண்டோம். யப்பான் சீனா மீது போர் தொடுத்ததும் நாம் மீண்டும் சியாங்கே ஸேக்குடன் கூட்டுச் சேர்ந்தோம். இந்த அனுபவம் உங்களுக்கு இல்லை.

**குவேரா:** அந்த அனுபவம் எங்களுக்கு இல்லாதது அதிர்ஸ்டமே.

**மாஓ:** உங்களுக்கு பாட்டிஸ்டாவுடன் கூட்டுச் சேர்வதற்கான வாய்ப்புகள் இருக்கவில்லை.

**குவேரா:** பாட்டிஸ்டாவுக்கு அமெரிக்காவுடன் எந்த முரண்பாடும் இருக்கவில்லை.

**மாஓ:** சியாங்கே ஸேக் பிரித்தானியாவினதும் அமெரிக்காவினதும் ஏவல் நாய். யப்பான் சீனாவை ஆக்கிரமித்ததை சியாங் ஏற்கவில்லை. 8 ஆண்டுகள் (1937 – 45) நீடித்த மூன்றாவது காலகட்டத்தில் யப்பானுக்கு எதிரான போராட்டத்தில் நாம் சியாங்கே ஸேக்குடன் கூட்டுச் சேர்ந்தோம். இந்தக் கூட்டு நல்லதொன்றல்ல. சியாங்கே ஸேக், பிரித்தானியாவினதும் அமெரிக்காவினதும் தரகு முதலாளித்துவ வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். யப்பான் தோற்கடிக்கப்பட்டதும், சியாங்கே ஸேக் எம்மீது தாக்குதல் தொடுத்தார். நாம் ஒரு வருடம் தற்காப்புக்காகப் போராடி, பின்னர் அவருக்கெதிரான மூன்றரை ஆண்டுப் போராட்டத்தில் அவரைத் தோற்கடித்து முழுமையான வெற்றியைப் பெற்றோம். அவர் தாய்வானுக்கு (Taiwan) தப்பியோடினார்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் எமது பொது எதிரி. அதேநேரத்தில் உலக மக்களின் பொது எதிரியுமாகும். நீங்கள் எல்லோரும் மிகவும் இளமையாக இருக்கிறீர்கள்.

**குவேரா:** எங்களில் ஒருவரைத் தவிர ஏனையோர் நீங்கள் புரட்சியை ஆரம்பிக்கும் போது பிறந்திருக்கவில்லை.

**மாஓ:** கடந்த காலத்தில் நாம் யுத்தத்தில் போராடினோம். இப்பொழுது நிர்மாணத்தில் போராட வேண்டியுள்ளது.

**குவேரா:** இன்னொரு விடயத்தையும் சீனாவும் கியூபாவும் பகிர்ந்து கொண்டுள்ளன. சிலர் கிராமப்புறங்களை நிராகரித்தனர். அதனால் எமது போராட்டம் இரண்டு பகுதிகளாகப் பிரிந்தது. ஒன்று, மலைப்பகுதிகளில் நடைபெற்ற கெரில்லாப் போராட்டம். மற்றையது, நகரப்புறங்களில் நடைபெற்ற வேலைநிறுத்தம். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் மலைப்பகுதிகளில் நடைபெற்ற கெரில்லாப் போராட்டத்தை சிறுமைப்படுத்தினர். முடிவில் வேலைநிறுத்தத்தை முன்னிலைப்படுத்தியவர்கள் தோல்வியைத் தழுவிக் கொண்டனர்.

**பிரதமர் சௌ என்லாய்:** இரண்டும் மிகவும் ஒரேமாதிரியானவை.

**மாஓ:** நீங்கள் உங்கள் கட்டுரைகளில் மூன்று கோட்பாடுகளை எழுப்பியுள்ளீர்கள். முதலாவது, மக்கள் பிற்போக்குவாதிகளைத் தோற்கடிக்க முடியும். இரண்டாவது, ஒரு புரட்சியை ஆரம்பிப்பதற்குத் தேவையான எல்லா நிலைமைகளும் பொருந்தி வரும்வரையில் அவர்கள் காத்திருக்கத் தேவையில்லை. மூன்றாவது கோட்பாடு என்ன?

**குவேரா:** மூன்றாவது கோட்பாடு, பிரதான கடமை கிராமப்புறங்களில் உள்ளது என்பது.

**பிரதமர் சௌ என்லாய்:** சில இலத்தீன் அமெரிக்க நண்பர்கள் விவசாயிகள் மீது கவனம் செலுத்துவதில்லை. ஆனால் நீங்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி வெற்றி பெற்றுள்ளீர்கள். சீனப் புரட்சியும் இது போன்றதுதான். தோழர் மாஓ சேதுங் இந்த விடயத்தில் மிகவும் கவனம் செலுத்தியுள்ளார்.

**மாஓ:** எங்களுக்கு ஏகாதிபத்தியம் என்றொரு இன்னொரு ஆசிரியரும் இருக்கிறார். இது எங்களது நீண்டகால கற்கையாளர். அமெரிக்க ஏகாதிபத்தியமே சிறந்த ஆசிரியர். உங்களுக்கும் இரண்டு சிறந்த ஆசிரியர்கள் இருக்கின்றனர். ஒன்று, பாட்டிஸ்டா, மற்றது, அமெரிக்க ஏகாதிபத்தியம். பாட்டிஸ்டா இப்பொழுது அமெரிக்காவில் இருக்கிறார். அவருக்கு கியூபாவுக்கு திரும்பி வரும் எண்ணமுண்டா? அவருக்கு இப்பொழுது எத்தனை வயது?

**குவேரா:** அவருக்கு 60 வயது. அவரைப் பின்பற்றுபவர்கள் இப்பொழுது 5 குழுக்களாகப் பிரிந்து போயுள்ளனர்.

**மாஓ:** சியாங்கே ஸேக்கிற்கு இப்பொழுது 64 வயது. சீனாவுக்கு திரும்பி வருவதற்கு ஒவ்வொரு நாளும் ஆவலுடன் காத்திருக்கிறார்.

**கொமாண்டர் எட்டி சுனோல்** (Commandante Eddy Sunol): சியாங்கே ஸேக் திரும்பி வருவதை நீங்கள் எதிர்பார்த்திருக்கிறீர்கள் என நினைக்கிறேன்.

**மாஓ:** அவர் இறுதியும் அறுதியுமாக அமெரிக்க தொடர்பைத் துண்டித்துக் கொண்டால், எமது அரசாங்கத்தில் அவருக்கு ஒரு இடம் வழங்கத் தயாராக இருக்கிறோம்.

**பிரதமர் சௌ என்லாய்:** அவர் தன்னுடன் தாய்வானையும் கொண்டு வந்தால் சிறப்பானதாக இருக்கும்.

**மாஓ:** ஆயினும் அவருக்குத் திரும்பி வருவதில் நாட்டமில்லை என்று தெரிகிறது.

**குறிப்புகள்:**

***சியாங்கே ஸேக்:*** சீனப் புரட்சி நடைபெறுவதற்கு முன்னர் ஆட்சியில் இருந்தவர். பிற்போக்கு கோமின்டாங் கட்சியின் தலைவர்.

**பாட்டிஸ்டா:** கியூபப் புரட்சி நடைபெறுவதற்கு முன்னர் கியூபாவில் ஆட்சியில் இருந்த சர்வாதிகாரி. இருவருமே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளாக இருந்தவர்கள்.

(மாஓவுக்கும் சேகுவேராவுக்கும் இடையிலான இந்த உரையாடல் மிக நீண்டதாகும். அதில் கியூபா மற்றும் சீனா பற்றிய முக்கிய விடயங்களே இதில் இடம் பெற்றுள்ளன)

# ‘எல் நினோ’ (El Niño) என்றால் என்ன?

**பூ**மியின் பெரும்பகுதியை சமுத்திரங்கள்தான் சூழ்ந்திருக்கின்றன. இதனால் நிலப்பரப்பில் நிலவும் வானிலைக்கும் சமுத்திரங்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. சமுத்திரங்களின் வெப்பநிலை எப்போதும் ஒரே போல இருப்பதில்லை. அவ்வப்போது மாறிக்கொண்டே கொண்டே இருக்கும். உலகில் இருக்கும் சமுத்திரங்களில் இருப்பவற்றிலேயே பெரிதான பசிபிக் சமுத்திரத்தில் ஏற்படும் குறிப்பிடத்தக்க ஒரு மாற்றம்தான் ‘எல் நினோ’ என அழைக்கப்படுகின்றது. இந்த மாற்றம் ஏதோ திடீரென உருவாகியது கிடையாது. பல வருடங்களாகப் பசிபிக் சமுத்திரத்தில் இந்த மாற்றம் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

‘எல் நினோ’பற்றி அறிந்து கொள்வதற்கு, முதலில் பசிபிக் சமுத்திரத்தில் வீசும் காற்றினைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். இயல்பான காலங்களில் பசிபிக் சமுத்திரத்தில் வீசும் காற்றானது கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சீராக வீசிக் கொண்டிருக்கும். இந்தக் காற்றானது கடலில் இருக்கும் சூடான நீரைப் பசிபிக் சமுத்திரத்தின் மேற்குப்பகுதியில் கொண்டுபோய்ச் சேர்க்கின்றது. இந்தப் பகுதி ஆசியா மற்றும் அவுஸ்திரேலியாவின் வடக்கின் அருகே அமைந்திருக்கும். அதே நேரம், சமுத்திரத்தின் தெற்கு மற்றும் மத்திய அமெரிக்காவின் அருகே கடலின் ஆழத்தில் இருந்து குளிர்ந்த நீர் மேல் நோக்கி வரும். இதனால் பசிபிக் கடலின் ஒரு பக்கத்தில் வெப்பமான பகுதியும், அதற்கு எதிர் பக்கத்தில் குளிரான பகுதியும் இயல்பாகவே உருவாகும். வெப்பமான பகுதியின் பக்கமாக இருக்கும் காற்று சற்று கூடுதலாக சூடாவதால், மறுபக்கம் குளிர்ந்த பகுதியில் இருக்கும் காற்று அதைச் சமன் செய்யும். இதனால் மழைப் பொழிவும், வானிலையும் இயல்பானதாக இருக்கும்.

ஒரு சில சமயங்களில் பசிபிக் சமுத்திரத்தில் வீசும் காற்றின் வேகம் மெதுவாக இருந்தாலோ, அல்லது வேறு சில காரணங்களினால் கடலில் ஆழமான பகுதியில் இருக்கும் குளிரான நீர் மேற்புறமாக வரத் தடை ஏற்பட்டாலோ ‘எல் நினோ’ உருவாவதற்கான வாய்ப்புகள் அதிகமாகின்றன. அப்போது சூடான பகுதி ஒரு பக்கமாக மட்டும் இல்லாமல் கடலில் பூமத்திய ரேகைக்கு அருகில் பரந்துபட்டு இருக்கும். அப்போது பசிபிக் பெருங்கடல் பகுதியின் வெப்பநிலையும் சற்று அதிகரித்துக் காணப்படும். கடல்நீரின் வெப்பநிலை வழக்கத்தை விடவும் 5° செல்சியஸ் அளவுக்கு உயரக்கூடும். பசிபிக் பெருங்கடலில் ஏற்படும் இந்த மாற்றமே ‘எல் நினோ’ என அழைக்கப்படுகிறது. இதன் காரணமாக வெப்பமான இடத்தின் அருகில் காற்றானது வரும் பொழுது அதன் வழக்கமான சுழற்சியில் மாற்றம் ஏற்படுகிறது. இந்த மாற்றம் உலகம் முழுவதிலும் பல பகுதிகளில் ஏற்படும் வானிலை மாற்றங்களுக்குக் காரணமாக அமைகின்றது.

‘எல் நினோ’ தாக்கத்தால் உலகம் எதிர்கொள்ளும் சிக்கல்களில் முக்கியமானது கணிக்க முடியாத வானிலைதான். உலகின் ஒரு பக்கம் சூறாவளியும், வெள்ளமும் ஏற்பட்டால், அதற்கு மறுபக்கம் வரட்சியும், மழைப் பொழிவு குறைந்தும் காணப்படும். அத்துடன் கணிக்க முடியாத அளவுக்கு இயற்கை சீற்றங்களும், ஏனைய பாதிப்புகளும் உண்டாகின்றன.

# லெனின்: தொழிலாளி - விவசாயி கூட்டணியின் சிற்பி

**‘லெனின் அவர்களால் முன்னெடுத்துக் கொண்டு வரப்பட்ட “தொழிலாளர் – விவசாயக் கூட்டணி” என்னும் கோட்பாடு மற்றும் நடைமுறை ரஷ்யாவில் மட்டுமல்ல சீனா, வியட்நாம், கொரியா மற்றும் கியூபாவிலும் வெற்றிகரமான சோசலிசப் புரட்சிகளுக்கு வழிவகுத்தது’**

**– டாக்டர் அசோக் தாவ்லே** (Dr.Ashok Dhawale, President of All India Kisan Sabha)




புகழ்பெற்ற ஹங்கேரிய மார்க்சியவாதியும், “வரலாறு மற்றும் வர்க்க உணர்வு” என்ற நூலின் ஆசிரியருமான ஜோர்ஜி லூகாஸ் (Gyorgy Lukacs), லெனினை “பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்கான போராட்டத்தால் இதுவரை உருவாக்கப்பட்ட மார்க்சுக்கு இணையான ஒரே கோட்பாட்டாளர்” என்று அழைத்தார். லெனினை அவர் மறைந்த நூற்றாண்டு விழாவில் 2024 இல் நாம் நினைவு கூர்கிறோம். கொள்கை மற்றும் நடைமுறை, இயக்கம் மற்றும் அமைப்பு – ஆகியவற்றின் மிகவும் அரிய ஒருங்கிணைப்பாக, உலகின் முதல் வெற்றிகரமான சோசலிசப் புரட்சியை வழிநடத்தி, எல்லா முரண்பாடுகளையும் எதிர்கொண்டு, அதைப் பாதுகாத்தார். அந்தப் பணியை சாதிக்க ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை கட்டி எழுப்பியதுதான் லெனினின் மிகச்சிறந்த சாதனையாகும்.

மார்க்சிசத்திற்கு லெனின் வழங்கிய பல அடிப்படையான தத்துவார்த்த பங்களிப்புகளில் மிக முக்கியமானது, ஒரு சோசலிசப் புரட்சிக்கான தொழிலாளர் – விவசாயி கூட்டணி என்னும் கருத்துருதான் முன்னோடியானதாகும். அவர் கோட்பாட்டு ரீதியாக இந்த கருத்தை முன் வைத்தது மட்டுமின்றி, தானும் ரஷ்யாவில் ஒக்ரோபர் புரட்சியின் வெற்றிக்காக, விவசாயி – தொழிலாளி கூட்டணியை யதார்த்தமாக்குவதற்கு நடைமுறையில் உழைத்தார். மேலும் சோசலிசத்தை கட்டி எழுப்புவதற்காக அதனைப் பராமரித்தார்.

**கருத்தாக்கத்தின் பரிணாம வளர்ச்சி**

மார்க்சும், ஏங்கல்சும் தங்களின் சிறப்பான எழுத்துக்களில், முக்கியமாக ஐரோப்பாவில் ஒப்பீட்டளவில் முன்னேறி இருந்த தொழில்துறை முதலாளித்துவ நாடுகளில் உள்ள பாட்டாளி வர்க்க – தொழிலாளி வர்க்கத்தின் மீது கவனம் செலுத்தினர். முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறும், தீவிரமான சமூக மாற்றத்திற்கான போராட்டத்திற்கு, பாட்டாளி வர்க்கம் தலைமையை ஏற்கும் என்று அவர்கள் அறிவித்தனர். அவர்கள் சமூகத்தின் வெவ்வேறு அடுக்குகளில் இருந்த விவசாயிகளின் பங்கினையும், நேர்மறை மற்றும் எதிர்மறை அம்சங்களையும் நிச்சயமாக கணக்கில் எடுத்துக் கொண்டனர். தொழிலாளி வர்க்கத்தால் வழிநடத்தப்பட்ட வீரம் செறிந்த 1871 பாரிஸ் கம்யூனுக்கு எதிராக, விவசாயிகளின் ஆதரவை பிரெஞ்ச் முதலாளித்துவம் பெற முடிந்தது என்பதே அதன் தோல்விக்கு முக்கியமான காரணங்களில் ஒன்று என்று அனுபவம் உணர்த்துகிறது. முதலாளித்துவ சொத்துக்கள் மீது தொழிலாளி வர்க்கம் தாக்குதல் நடத்தியது என்பது பிறகு மீண்டும் விரிவடைந்து விவசாயிகளின் சொத்துக்களின் மீதும் தொடரும் என்ற அச்சத்தை உருவாக்கி இந்த ஆதரவு திரட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் மார்க்சும், ஏங்கல்சும் விவசாயிகளின் நேர்மறையான சக்தியை அறிந்திருந்தனர். 1856 ஏப்ரல் 16 இல் ஏங்கல்சுக்கு, மார்க்ஸ் எழுதிய கடிதத்தில் இது தெளிவாகிறது. அதில் அவர் கூறுகிறார்: “ஜெர்மனியின் முழு விஷயமும், பாட்டாளி வர்க்க புரட்சியை விவசாயப் போரின் இரண்டாவது வடிவமாக ஆதரிக்கும் அதன் சாத்தியத்தை பொறுத்தது. அதன் விளைவுகள் மிகச் சிறப்பானதாக இருக்கும்.” லெனின் இந்த அவதானிப்பை மிக ஆரம்பத்திலேயே தீவிரமாகக் கொண்டிருந்தார். மேலும் 1923 மே 30 அன்று பிராவ்தாவில் முதன் முதலில் வெளியிடப்பட்ட “நமது புரட்சி” என்ற தனது வாழ்வின் கடைசி கால கட்டுரைகளின் ஒன்றில் அதை மீண்டும் மீண்டும் குறிப்பிடுகிறார்.

லெனின் தனது 26ஆவது வயதில் “ரஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி” என்ற நூலை 1896 இல் எழுதினார். அந்தப் புத்தகத்தில் அவர் பாட்டாளி வர்க்கம் மற்றும் விவசாயிகளின் புரட்சிகர சக்தியை அடிக் கோடிட்டு காட்டினார். 1901 ஆம் ஆண்டிலேயே “தொழிலாளர் கட்சியும் விவசாயிகளும்” என்ற தனது கட்டுரையில் லெனின் தொழிலாளி வர்க்கப் போராட்டங்களின் புரட்சிகர நோக்கத்தை பற்றி பேசுகிறார். பின்னர் எழுதினார்: “பல இலட்சக் கணக்கான விவசாயிகளிடையே, வர்க்கப் போராட்டம் மற்றும் அரசியல் உணர்வை விதைக்காமல் இந்த இலக்கை அடைய முடியுமா? இந்த விதைகளை விதைப்பது சாத்தியமில்லை என்று யாரும் கூற வேண்டாம்! ஏற்கனவே ஆயிரக்கணக்கான வழிகளில் இது செய்யப்படுகிறது, அது நம் கவனத்திற்கும் செல்வாக்கிற்கும் வரவில்லை”.

1903 ஆம் ஆண்டில் லெனின் தனது “நாட்டுப்புற ஏழைகளுக்கு” என்ற புத்தகத்தின் மூலம் இந்த மையப் பொருளை பெரிதும் விரிவுபடுத்தினார். இது இன்றும் அதன் தாக்கத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது. தொழிலாளர் – விவசாயி கூட்டணியின் இரட்டை நோக்கம்: ஜார் ஆட்சியால் நசுக்கப்பட்ட 1905 முதல் ரஷ்யப் புரட்சி, மதிப்புமிக்க படிப்பினைகளை கொடுத்துள்ளது. அப்போதுதான் போல்ஷ்விக்கட்சி “பாட்டாளி வர்க்கம் மற்றும் விவசாயிகளின் புரட்சிகர ஜனநாயக சர்வாதிகாரம்” என்ற முழக்கத்தை முன் வைத்தது. இது மார்க்சியத்தின் மதிப்பு

மிக்க கொடையாக இருந்தது. உறுதியான நிலைமைகளின் உறுதியான பகுப்பாய்வுகளின் அடிப்படையில் லெனின் முன்வைத்த இந்த புதிய முழக்கத்திற்கான அடிப்படை பகுப்பாய்வு மற்றும் விவாதம் பின்வருமாறு:

ஆரம்ப கால முதலாளித்துவத்திற்கும், பிற்கால முதலாளித்துவத்திற்கும் இடையே பெரிய வித்தியாசம் இருந்தது. ஆரம்பகால முதலாளித்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முதலாளித்துவத்தின் தலைமையில் *1789* இல் நடந்த பிரஞ்சு புரட்சி நிலப்பிரபுத்துவத்தை அடித்து நொறுக்கியது. மற்றும் நிலப்பிரபுக்களின் நிலங்களை விவசாயிகளிடையே மறு விநியோகம் செய்தது. ஆனால் பிந்தைய முதலாளித்துவத்தில் உருவான முதலாளித்துவம், ரஷ்யாவிலும் பிற இடங்களிலும் அதன் முந்தைய வீரியத்தை இழந்துவிட்டது. நிலப்பிரபுத்துவத்திற்கு அதனால் மரண அடி கொடுக்க முடியவில்லை. உண்மையில் விவசாயிகளின் ஜனநாயக அபிலாசைகளை விரக்தி அடையச் செய்து, நிலப் பிரபுத்துவ கட்டமைப்புடன் சமரசம் செய்து கொள்ள முயன்றது. வளர்ந்து வரும் தொழிலாளி வர்க்கம் அதை அச்சுறுத்தியது.

நிலப்பிரபுக்களின் சொத்துக்களை தாக்கினால், அதன் விளைவாக முதலாளிகளின் சொத்துக்களின் மீதும் உழைக்கும் மக்களின் மறு தாக்குதலுக்கு இது வழி வகுக்கும் என்று முதலாளித்துவம் பீதி அடைந்தது. இத்தகைய சூழ்நிலையில்தான் லெனின், "தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான தொழிலாளர் – விவசாயி கூட்டணி" என்ற கருத்தை முன் வைத்தார். இது ஜனநாயக (நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு) புரட்சியை நிறைவு செய்வது மட்டுமல்லாமல், பின்னால் ஒரு சோசலிசப் புரட்சி (முதலாளித்துவ எதிர்ப்பு) வரை முன்னேறும் எனக் கருதினார். எனவே *1905* இல் எழுதப்பட்ட "ஜனநாயகப் புரட்சியில் சமூக ஜனநாயகத்தின் இரண்டு தந்திரோபாயங்கள்" என்ற தனது புகழ்பெற்ற புத்தகத்தில் லெனின் பின்வரும் முடிவை எடுத்தார்:

பாட்டாளி வர்க்கம் ஜனநாயகப் புரட்சியை முழுமைக்கு இட்டுச் செல்ல வேண்டும். அதற்கு அது வெகுஜன விவசாயிகளுடன் தன்னை அணி சேர்த்துக் கொண்டு ஆட்சி அதிகாரத்தை படைபலம் மூலம் நசுக்குவதுடன், முதலாளித்துவத்தின் அடித்தளத்தை நிலை குலையச் செய்ய வேண்டும். சோசலிசப் புரட்சியை வெற்றியடையச் செய்ய பாட்டாளி வர்க்கம் சாதாரண அடித்தட்டு பாட்டாளி மக்களுடன் அணி சேர்ந்து முதலாளிகளை படைபலம் மூலம் நசுக்கி, பெரு விவசாயிகள் மற்றும் குட்டி முதலாளிகளையும் நிலை குலையச் செய்ய வேண்டும். தொழிலாளர் – விவசாயி கூட்டணியை வலுப்படுத்துவதற்கான அடிப்படைக் கோட்பாட்டின் அடிப்படையில் லெனினும், போல்ஷிவிக் கட்சியும் பல தீவிரமான கொள்கை நிலைப்பாடுகளையும், நடைமுறை நடவடிக்கைகளையும், குறிப்பாக ஒக்ரோபர் புரட்சிக்கு பிறகும் அது அதிகாரத்தில் இருந்த போதும் தொடர்ந்து எடுத்தது.

ரஷ்ய புரட்சியின் உன்னதமான பேரணி முழக்கமான "அமைதி! நிலம்! ரொட்டி! இது பாட்டாளிகளின் ஒற்றுமையை எதிரொலித்தது! தொழிலாளர்கள் – விவசாயிகள் – மற்றும் சிப்பாய்களின் சோவியத்துக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. மேலும் அவர்களின் பிரதிநிதிகள் (deputies) மாநாடுகளில் ஒன்று கூடினர். *1923* மார்ச் *2* திகதியிட்ட லெனினின் கடைசி கட்டுரையான" "சிறந்தது குறைவானது, ஆனால் சிறந்தது" (Better Fewer, But Better). இது தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் பணிகளை ஆய்வு செய்தது. லெனின் எழுதினார்: தொழிலாளர்கள் விவசாயிகளின் தலைமையை தக்க வைத்துக் கொள்ளும் – விவசாயிகளின் நம்பிக்கையை தக்க வைத்துக் கொள்ளும், ஓர் அரசை கட்டி எழுப்ப நாம் பாடுபட வேண்டும். மேலும் மிகச்சிறந்த பொருளாதார நிலையை கடைப்பிடிப்பதன் மூலம் நமது சமூக உறவுகளில் இருந்து ஊதாரித்தனத்தின் ஒவ்வொரு தடயத்தையும் அகற்ற வேண்டும்.

**ஏகாதிபத்தியம் மற்றும் புதிய சவால்கள்**


லெனின் *1916* இல் "ஏகாதிபத்தியம்" என்ற அதே பெயரில் உள்ள நூல் மூலம் ஏகாதிபத்தியம் பற்றிய ஒரு சிறந்த பகுப்பாய்வை மேற்கொண்டார். இன்று ஒரு நூற்றாண்டு ஆன பின்பும் லெனினால் அன்று கோடிட்டு காட்டப்பட்ட ஏகாதிபத்தியத்தின் அடிப்படை குணாம்சங்களான சுரண்டல், கொள்ளை, ஏற்றத்தாழ்வுகள், போர்கள், அழிவுகள் இன்று மேலும் வலுப்பெற்றே உள்ளன. சர்வதேச நிதி மூலதனம் வெறித்தனத்துடன் செயல்படுகிறது. போர்களாலும், பஞ்சங்களாலும் இலட்சக்கணக்கானவர்கள் கொல்லப்படுகின்றனர். புவி வெப்பமடைதல் மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேடு காரணமாக பூமிக்கிரகமே பெரும் ஆபத்தில் சிக்கிக் கொண்டுள்ளது.

லெனின் அவர்களால் முன்னெடுத்துக் கொண்டு வரப்பட்ட "தொழிலாளர் – விவசாயக் கூட்டணி" என்னும் கோட்பாடு மற்றும் நடைமுறை ரஷ்யாவில் மட்டுமல்ல சீனா, வியட்நாம், கொரியா மற்றும் கியூபாவிலும் வெற்றிகரமான சோசலிசப் புரட்சிகளுக்கு வழிவகுத்தது. இந்த நாடுகள் ஒவ்வொன்றிலும் புரட்சிகரப்படைகள் முதலாளித்துவ நிலப்பிரபுகளுக்கு எதிராக போராடியதுடன் அவர்களுக்கு பின்னணியாக இருந்த ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் போரிட்டன. ஏகாதிபத்திய உலக மயமாக்கல் மற்றும் நவதாராளவாதத்தின் புதிய சகாப்தத்தில் நவ – பாசிச, பேரினவாத, வகுப்புவாத மற்றும் இனவாத போக்குகள் தங்கள் அசிங்கமான தலைகளை உயர்த்துவதால், ஒவ்வொரு நாட்டிலும் தொழிலாளி – விவசாயி கூட்டணியை உருவாக்கி வலுப்படுத்துவதற்கான தேவை – முக்கியத்துவம் அதிவேகமாக வளர்ந்துள்ளது. ஏனெனில் நிலப்பிரபுத்துவம் மற்றும் அதன் எச்சங்களுக்கு மேலதிகமாக, தொழிலாளி வர்க்கமும் விவசாயிகளும் இன்று நவதாராளமயம் மற்றும் அதனால் விளைந்த தீமைகளினால் இன்னும் மோசமான தாக்குதலை எதிர்கொண்டுள்ளனர். இன்று ஒரே நேரத்தில் உற்பத்தியில் ஈடுபடும் வர்க்கங்களாகவும் அதே நேரத்தில் சுரண்டப்படும் வர்க்கங்களாகவும் விவசாயிகள் மற்றும் தொழிலாளிகள் உள்ளனர். இந்த இரண்டு வர்க்கங்களின் மிக வலுவான ஒற்றுமையால் மட்டுமே இதை முறியடிக்க முடியும்.

பிரபாத் பட்நாயக் எழுதுவது போல், "மூன்றாம் உலகத்தின் பெரும் பகுதியில் ஒரு புரட்சிக்கான வாய்ப்பு ஏற்படுவது என்பது முக்கியமாக ஒரு தொழிலாளி – விவசாயி கூட்டணியை வெற்றிகரமாக கட்டி எழுப்புவதை பொறுத்தது. அத்தகைய

**தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க...**

# செய்யறிவு: உலகில் எதனை சாதிக்கக் காத்திருக்கின்றது?




**செய்யறிவு** (செயற்கை நுண்ணறிவு, Artificial Intelligence - AI) என்ற சொல் தற்போது உலகெங்கிலும் பரவலாக கேள்விப்படும் ஒன்றாக உள்ளது. செய்யறிவு என்றாலே எமக்கு தானியங்கி வாகனங்கள், செய்யறிவு ரோபோக்கள் (Artificial intelligence robots) மற்றும் செய்யறிவினால் உருவாக்கப்படும் புகைப்படங்கள் ஆகியவை நினைவுக்கு வரும். செய்யறிவு குறித்து நேர்மறையான மற்றும் எதிர்மறையான பல விஷயங்கள் வலம் வந்து கொண்டுதான் இருக்கின்றன. செய்யறிவு என்றால் என்ன? செய்யறிவினால் மனித குலத்துக்குக் கிடைப்பதெல்லாம் நன்மைகள்தானா? அல்லது தீமைகளா?

**செய்யறிவு**

செய்யறிவு 1950 களிலிருந்தே பேசப்பட்டு வருகின்றது. மனிதர்களின் அறிவினைப் பயன்படுத்தி செய்யப்படும் வேலைகளை இயந்திரங்களைக் கொண்டு செய்யப்படுவதை செய்யறிவு எனலாம். ஒரு வேலையைச் செய்து முடிக்க முன்பு தேவைப்பட்ட மனிதர்களின் உதவி தற்போது செய்யறிவின் வரவால் அவசியம் குறைவானதாக மாறிவிட்டது. செய்யறிவின் மூலம் இயந்திரங்கள் ஒரு விஷயத்துக்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக் கொள்வது, பிரச்னைகளுக்கு தீர்வு வழங்குவது, திட்டமிடுவது, புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வது என பல்வேறு வேலைகளை மனிதர்களைப் போன்றே செய்து முடிக்கின்றன. உண்மையில், மனிதர்களைவிட வேகமாகவும், துல்லியமாகவும் செய்து முடிக்கின்றன.

**செய்யறிவை எப்படி பயன்படுத்துவது?**

தினசரி வாழ்க்கையில் செய்யறிவின் பயன்பாடு பெருமளவுக்கு அதிகரித்துள்ளது. உதாரணத்திற்கு, நாங்கள் தொலைபேசியில் பயன்படுத்தும் கூகுள் குரல் உதவி (Google Voice Assistant) மற்றும் அலெக்ஸா ஸ்பீக்கர் (Alexa Speaker) போன்றவற்றைக் கூறலாம். அதேபோல சாட் ஜிபிரி (Chat GPT), கூகுள் பார்ட் (Google Bard) போன்ற செய்யறிவைப் பயன்படுத்தி இயங்கும் பயன்பாடுகளை, நாங்கள் பரவலாக உபயோகித்து வருகிறோம். கூகுள் அசிஸ்டெண்ட் (Google Assistant) மற்றும் சாட் ஜிபிரியில் நீங்கள் ஒரு நாட்டின் தலைநகர் என்னவென்று கேட்டால் உங்களுக்கு சரியான விடையை அவை உடனடியாகத் தருகின்றன. ஒரு நாட்டின் தலைநகர் மட்டுமின்றி, வானிலை, முக்கியச் செய்திகள், கட்டுரைகள் போன்ற பலவற்றையும் நாங்கள் அவற்றிலிருந்து பெற முடியும். மனிதர்களின் நுண்ணறிவை அப்படியே முழுமையாக பிரதிபலிக்க முடியாவிட்டாலும், அவற்றுக்கு கொடுக்கப்பட்டுள்ள உள்ளீடுகளை வைத்து அவை பல தகவல்களை எமக்கு வழங்குகின்றன.

*இ.தமிழ்வேந்தன்*

***செய்யறிவின் வகைகள்***

செய்யறிவைப் பலரும் குறுகிய (Narrow) செய்யறிவு, பொதுவான (General) செய்யறிவு, சூப்பர் (Super) செய்யறிவு என மூன்று வகைகளாக வகைப்படுத்துகின்றனர்.

**குறுகிய செய்யறிவு**

ஒரு குறிப்பிட்ட வேலையை செய்து முடிக்க இந்த குறுகிய செய்யறிவு பயன்படுத்தப்படுகிறது. இதனை வலிமை குறைந்த (Weak) செய்யறிவு என்றும் அழைக்கின்றனர். குறிப்பிட்ட வேலைகளை செய்து முடிக்கும் விதமாகவே இந்த குறுகிய செய்யறிவு வடிவமைக்கப்பட்டுள்ளது. சிரி(Siri), அலெக்ஸா, கூகுள் அசிஸ்டெண்ட் போன்ற பயன்பாடுகள் இந்த குறுகிய செய்யறிவின் அடிப்படையிலேயே செயல்படுகின்றன. இந்த குறுகிய செய்யறிவைப் பயன்படுத்தி மேற்கண்ட விஷயங்கள் மட்டுமல்லாது சில வாடிக்கையாளர் சேவைகளையும் மேற்கொள்ளலாம். இந்த குறுகிய செய்யறிவுக்கு மற்றொரு எடுத்துக்காட்டு சாட் ஜிபிடி. சாட் ஜிபிரி ஒரு குறிப்பிட்ட வேலையை செய்வதற்காக உருவாக்கப்பட்டதாகும். சாட் ஜிபிரியில் நாங்கள் கொடுக்கும் உள்ளீடுகளுக்கு சாட் ஜிபிரி நாங்கள் கேட்பது தொடர்பான தகவல்களை நமக்கு திரட்டிக் கொடுக்கும். இந்த குறிப்பிட்ட சேவையை மட்டுமே சாட் ஜிபிரியின் மூலம் பெற முடியும். அதற்கான உள்ளீடுகளும் குறிப்பிட்ட சேவையை அளிப்பதற்கு ஏற்பவே வடிவமைக்கப்பட்டிருக்கும்.

**பொதுவான செய்யறிவு**

பொதுவான செய்யறிவு, வலிமையான (Strong) செய்யறிவு என்றும் அழைக்கப்படுகிறது. இந்த பொதுவான செய்யறிவின் மூலம் வெவ்வேறு விதமான பலதரப்பட்ட வேலைகளை செய்து முடிக்க முடியும். இந்த பொதுவான செய்யறிவு மனித நுண்ணறிவைக் காட்டிலும் திறன் மிகுந்தது. இந்த பொதுவான செய்யறிவு மனிதர்களைப் போலவே சிந்திக்கக்

கூடிய திறன் கொண்டது. தனக்குள் இருக்கும் அதிகப்படியான அனுபவங்களை வைத்து பிரச்னைகளுக்கான தீர்வு காணும் திறன் கொண்டது பொதுவான செய்யறிவு. இந்த பொதுவான செய்யறிவு குறித்து பல ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

**சூப்பர் செய்யறிவு**

சூப்பர் செய்யறிவு மனித குலத்தை ஆச்சரியத்தில் ஆழ்த்துவது மட்டுமல்லாது, மனிதகுலத்துக்கு பேராபத்தாகவும் அமையலாம். இந்த சூப்பர் செய்யறிவு மனிதனின் நுண்ணறிவைக் காட்டிலும் பல மடங்கு அதிகமாக சிந்திக்கக் கூடியது. மனிதனின் நுண்ணறிவை மிஞ்சும் அளவுக்கு வல்லமை படைத்தது. மனிதனால் தீர்க்க முடியாத பல சிக்கலான விஷயங்களையும் இந்த சூப்பர் செய்யறிவு தனது தொடர்ச்சியான கற்றலினால் தீர்க்க இயலும். இதனை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தினால் மருத்துவம், தொழில்நுட்பம் மற்றும் பல துறைகளில் நம்பமுடியாத உச்சத்தை அடையாலம்.

## *செய்யறிவின் பயன்பாடுகள்*

**சாட் ஜிபிரி**

சாட் ஜிபிரியில் இந்த செய்யறிவு தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. மொழிப்பெயர்த்தல், கேள்விகளுக்கு பதிலளித்தல் போன்ற சேவைகளை இதன்மூலம் பெற முடியும். இதனை உலகில் மக்கள் தற்போது பரவலாகப் பயன்படுத்தி வருகிறார்கள்.

**தானியங்கி கார்கள்**

தொழில்நுட்பம் பெரிய அளவில் வளர்ச்சியடைந்த போதிலும், செய்யறிவு தொழில்நுட்பத்தில் இயங்கும் தானியங்கி கார்களில் பயணிகளின் பாதுகாப்பு மிக முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. இந்த வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள தொலையுணர் (Sensors) கருவிகள் மூலம் விபத்துகளற்ற பயணம் சாத்தியமாகிறது. மேலும், வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள கமராக்கள் வாகனம் சரியான பாதையில் பயணிக்க உதவுகின்றது. கூகுள், ரெஸ்லா (Tesla) உள்ளிட்ட பல முன்னணி நிறுவனங்கள் இந்த தானியங்கி வாகனங்களை சோதனை முயற்சியில் இயக்கி வருகின்றன.

**ரோபொட்டிக்ஸ் (Robotics)**

ரோபொட்டிக்ஸ் துறையிலும் செய்யறிவு பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. இந்தத் துறையில் பல முன்னேற்றங்கள் தேவைப்பட்டாலும் தற்போது ரோபோக்கள் செய்யறிவைப் பயன்படுத்தி மனிதர்கள் செய்யக்கூடிய வேலைகளை செய்து வருகின்றன.

**செய்யறிவு உரையாடல்**

செய்யறிவு உரையாடலில் பயனாளர் தங்களது கேள்விகளைக் கேட்டு அதற்கான பதிலைப் பெறலாம். இந்த தொழில்நுட்பத்தில் உள்ளீடுகளை கேட்டுக் கொள்ளவும், அதற்கான தகவலை வழங்கவும் இயந்திரங்கள் தயாராக இருக்கும். இதனால் இரு நபர்கள் உரையாடுவது போன்ற உணர்வு கிடைக்கும். இந்த செய்யறிவு உரையாடல்களுக்கு கூகுள் பார்ட், அலெக்ஸா, வொய்ஸ் அசிஸ்டெண்ட்ஸ் மற்றும் ஸ்மார்ட் ஸ்பீக்கர்களை உதாரணமாகக் கூறலாம்.

**பயன்பாட்டில் உள்ள செய்யறிவு சேவைகள்**

பொதுப் பயனாளர்களும், தொழில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் பயன்படும் வகையிலான பல செய்யறிவு சேவைகள் தற்போது பயன்பாட்டில் உள்ளன. இந்த செய்யறிவு சேவைகள் மூலம் நமது தினசரி வேலைகளை நம்மால் எளிதில் செய்து முடிக்க முடியும். ஆப்பிள் நிறுவனத்தின் சிரி, கூகுள் வாய்ஸ் அசிஸ்டெண்ட், சாட்பாட்ஸ், மெய்நிகர் உதவியாளர்கள், கூகுள் மொழிப்பெயர்ப்பான், மைக்ரோசாஃப்ட் மொழிப்பெயர்ப்பான், அமேசான் மொழிபெயர்ப்பான் மற்றும் சாட் ஜிபிடி போன்ற மொழிப்பெயர்த்தல் பயன்பாடுகள், புகைப்படம் மற்றும் விடியோ அடையாளம் காணுதல், மென்பொருள் வளர்ச்சித் துறைகளில் செய்யறிவு பயன்பாடு போன்றன பயன்பாட்டில் உள்ள சேவைகள்.

## *செய்யறிவில் முன்னணி நிறுவனங்கள்*

**ஓபன்ஏஐ (OpenAI)**

ஓபன்ஏஐ செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி செயல்படும் பல்வேறு சேவைகளை அதன் பயனாளர்களுக்கு இலவசமாக வழங்கி வருகிறது. ஏஐ சாட்பொட் (AI Chatbot) சாட்ஜிபிரி மற்றும் டால்–இ 2 (DALL-E 2) ஆகியன அதற்கு உதாரணங்களாகும். சாட்ஜிபிரியில் உள்ளீடுகளைக் கொடுத்து நமக்குத் தேவையான தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். டால்–இ 2 என்பது புகைப்படத்தை உருவாக்கும் தொழில்நுட்பமாகும்.

**அல்ஃபபெட் (Alphabet)**

கூகுளின் அல்ஃபபெட் நிறுவனமும் இந்த செய்யறிவுத் தொழில்நுட்பத்தை பயனாளர்களுக்கு வழங்குவதில் முன்னணி நிறுவனமாக விளங்குகிறது.

**மைக்ரோசாஃப்ட் (Microsoft)**

மைக்ரோசாஃப்ட் நிறுவனம் செய்யறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பல சேவைகளை வழங்குகிறது. இயந்திரக் கற்றல், தகவல் பகுப்பாய்வுகள், செய்யறிவு உரையாடல் போன்ற சேவைகள் செய்யறிவின் மூலம் வழங்கப்படுகின்றன.

செய்யறிவு தொழில்நுட்பத்தில் மேற்கண்ட நிறுவனங்கள் முன்னணியில் இருப்பினும், உலகின் பல நிறுவனங்களும் செய்யறிவு தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொண்டு வருகின்றன. பெய்டு (Baidu), அலிபாபா (Alibaba), லெனோவோ (Lenovo) மற்றும் ரெஸ்லா போன்ற நிறுவனங்கள் செய்யறிவு தொழில்நுட்பத்தில் தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளன.

**உலகை மாற்றும் செய்யறிவு**

நாங்கள் வேலை செய்யும் விதம், எமது உடல்நலம், நாங்கள் பார்க்கும் ஊடகங்கள், எமது தனிப்பட்ட சுதந்திரம் என அனைத்திலுமே செய்யறிவு தாக்கத்தை ஏற்படுத்த வல்லது. இந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒருவர் தனது அலுவலகத்துக்கு தானியங்கி வாகனங்களின் மூலம் பயணிக்கலாம். எமது கட்டளைகளுக்கு ஏற்ப செய்யறிவு செயல்பட்டு நமது வேலையை மிக எளிதாக்கும். இந்த செய்யறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மருத்துவர்கள் புற்றுநோயை அதன் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து குணப்படுத்த இயலும். செய்யறிவின் வளர்ச்சி மருத்துவத் துறையில் எண்ணற்ற பலன்களை தரவல்லது. இதன்மூலம் மனித உயிரிழப்புகளைத் தடுக்கலாம்.

செய்யறிவில் தீமைகளே இல்லை எனவும் கூறிவிட முடியாது.

செய்யறிவில் பல ஆபத்துகளும் உள்ளன. செய்யறிவைப் பயன்படுத்தி போலியான புகைப்படம், வீடியோ மற்றும் ஓடியோக்களை எளிதில் உருவாக்கிவிட முடியும். இவ்வாறு செய்யறிவைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் உண்மையானதைப் போன்று மிகத் துல்லியமாக இருக்கும். இதனால் பல சிக்கல்கள் எழும் வாய்ப்புள்ளது. தனிநபரின் சுதந்திரம் என்பது பறிபோகும் அபாயம் இந்த செய்யறிவு தொழில்நுட்பத்தில் இருப்பதால் பலரும் இந்த தொழில்நுட்பத்துக்கு முற்றிலுமாக தடை விதிக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்து வருகின்றனர்.

**செய்யறிவால் வேலைகள் பறிபோகுமா?**

செய்யறிவு தொழில்நுட்பம் எமது வேலைகளை எளிதாக்குவதுடன், எதிர்காலத்தில் எமது வேலைகளை அழிக்கும் வல்லமையும் படைத்தது. இந்த தொழில்நுட்பத்தினால் பலர் வேலையிழக்கக் கூடும் அபாயம் உள்ளது. செய்யறிவு முழுமையாக அனைத்து வேலைகளையும் எம்மிடமிருந்து எடுத்துவிடாது என்றாலும், வேலையின் தன்மையில் பெரிய அளவிலான பாதிப்பு இருக்கும். நிறுவனங்களில் செய்யறிவு தானாக அனைத்து வேலைகளையும் செய்துவிட முடியாது. மாறாக, செய்யறிவைப் பயன்படுத்தி நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் தங்களது வேலையை மேலும் எளிதாக்க முடியும். இதன் மூலம் உற்பத்தித் திறன் அதிகரிக்கும்.

செய்யறிவு தொழில்நுட்பம் மனித ஆற்றலை மிஞ்சி செயல்பட்டு மனிதகுலத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்ற கருத்தையும் ஆராய்ச்சியாளர்கள் முன்வைக்கின்றனர். செய்யறிவைப் பயன்படுத்தி இயங்கும் தானியங்கி வாகனங்கள் முழுமையாக இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. தானியங்கி டிரக்குகள் சந்தைக்கு வந்துவிட்டால், அமெரிக்காவில் மட்டும் 5 இலட்சம் பேர் வேலையிழக்கக் கூடும் என கணிக்கப்பட்டுள்ளது. அப்படியானால், அந்த 5 இலட்சம் பேரின் நிலை என்ன? ஒரு துறையில் மட்டுமே 5 இலட்சம் பேருக்கு வேலையிழப்பு ஏற்படுமானால் ஒவ்வொரு துறையில் ஏற்படும் வேலையிழப்புகளையும், அவர்களின் எதிர்காலத்தையும் நினைத்தால் தலை சுற்றுகிறது.

செய்யறிவு தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில் கவனம் செலுத்தும் ஒவ்வொருவரும் மனித குலத்தின் நன்மைகள் பற்றியும் சிந்தித்துச் செயல்பட்டால், தொழில்நுட்பமும் மனிதகுலமும் என இரண்டுமே இணக்கமாகப் பயணித்து சாதிக்கலாம்!

**10ம் பக்கத்தொடர்ச்சி...**

கூட்டணியில்லாமல் முதலாளித்துவத்தின் அடுத்த கட்டமான புரட்சிகர மீறல் சாத்தியம் இல்லை. ஒக்ரோபர் புரட்சியே அத்தகைய கூட்டணியில்லாமல் சாத்தியம் ஆகவில்லை.

இன்று நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஜனநாயகப் புரட்சியை நிறைவு செய்வதற்கு விவசாயி – தொழிலாளர் கூட்டணி அவசியம். சமகால உலகமயமாக்கல் மூன்றாம் உலகின் பெரும் பகுதியில் கட்டவிழ்த்துவிட்டுள்ள கடுமையான விவசாய நெருக்கடி மற்றும் பொதுவான சிறு உற்பத்தி நெருக்கடிகளை சமாளிப்பதற்கும் இத்தகைய கூட்டணியின் அவசியம் இன்று எழுந்துள்ளது. காலனித்துவ எதிர்ப்பு போராட்டத்தின் வாக்குறுதிகளுக்கு இணங்க காலனித்துவத்திற்கு பிந்திய “சமூக பொருளாதாரத் துறைகளில் அரசாங்கக் கட்டுப்பாடு உள்ள ஆட்சிகள்” (dirigist) பல்வேறு அளவுகளில் வழங்கிய, சிறு உற்பத்திகளுக்கான அரசின் ஆதரவை, இது நீக்கியது. மேலும் இந்தத் துறையை உலக அளவில் நடமாடும் பெரும் மூலதனத்தின் அத்துமீறலுக்கும், உலகச் சந்தையில் நிலவும் விலை ஏற்ற இறக்கங்களுக்கும் ஆளாக்கியுள்ளது. இந்தப் பொருளாதாரங்களில், முதலாளித்துவத்துறைகளில், வேலையாட்களுக்கான தேவையின் வளர்ச்சி மிகவும் பரிதாபகரமாக, போதுமானதாக இல்லை.

தொழிலாளர் சக்தியின் இயல்பான வளர்ச்சி கூட குறைவாக இருப்பதால் சிறு உற்பத்தியில் பெரு மூலதனத்தின் இந்த அத்துமீறல் பல இலட்சக்கணக்கான உழைக்கும் மக்களுக்கு கடுமையான துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. முதலாளித்துவத்துறையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் உட்பட இந்தியாவில் கடந்த 30 ஆண்டுகளில் நான்கு இலட்சத்திற்கும் அதிகமான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்”

**இந்தியாவின் சமீபத்திய முயற்சிகள்:**

2000ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்ட சிபிஐ(எம்) திட்டம், பத்தி 7.6 இல் கூறுகிறது. “மக்கள் ஜனநாயக முன்னணியின் மையமும், அடிப்படையும் தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாயிகளின் உறுதியான கூட்டணியாகும். இந்த கூட்டணி தேசிய சுதந்திரத்தை பாதுகாப்பதில் மிக முக்கியமான சக்தியாகும். வரும் காலத்தில் ஏற்பட உள்ள ஜனநாயக மாற்றங்களையும், அனைத்துத் துறைகளிலும் சமூக முன்னேற்றத்தை உறுதி செய்யவும், புரட்சியை முன்னெடுப்பதில் மற்ற வர்க்கங்களின் பங்கு முக்கியமாகிறது. தொழிலாளர் –விவசாயி கூட்டணியின் வலிமை மற்றும் ஸ்திரத்தன்மையை அவசியமாக்குகிறது”

இந்தியாவில் தொழிலாளர் – விவசாயி ஒற்றுமை நமது ஏகாதிபத்திய எதிர்ப்பு சுதந்திரப் போராட்டத்திலும், தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாயிகளின் முந்தைய வரலாற்றுப் போராட்டங்களிலும் பல்வேறு புகழ் பெற்ற நிகழ்வுகளில் வெளிப்பட்டுள்ளது. சமீபத்திய ஆண்டுகளில் 2018 முதல் 2023 வரை சி.ஐ.ரி.யு (Centre of Indian Trade Unions - CITU)), அகில இந்திய விவசாயிகள் சங்கம் மற்றும் அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கம் நாடு தழுவிய பெரிய கூட்டு நடவடிக்கைகளின் மூலம் இந்த திசையில் சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வெறுக்கப்பட்ட மூன்று விவசாய சட்டங்களுக்கு எதிராக 2020 – 2021 ஆம் ஆண்டில் தேசிய அளவிலான விவசாயிகள் நடத்திய ஒரு வருட கால, பிரசித்தி பெற்ற வெற்றிகரமான போராட்டத்தில் குறிப்பிடத்தக்க சாதனை படைக்கப்பட்டுள்ளது. இது ஐக்கிய விவசாய முன்னணி எனும் சம்யுக்த கிசான் மோர்ச்சாவின் (SKM) தலைமையில் நடத்தப்பட்டது. மேலும் இதற்கு மத்திய தொழிற்சங்கங்களின் தலைமையின் கீழ் தொழிலாளி வர்க்கத்தின் நிபந்தனையற்ற ஆதரவு கிடைத்தது. இதே போல மத்திய தொழிற்சங்கங்கள் தலைமையிலான நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டங்களுக்கும் ஐக்கிய விவசாய முன்னணி தன் முழு ஆதரவை தந்தது. இந்த இரு வர்க்கங்களின் கூட்டுப் போராட்டம் 2024 இலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இருப்பினும், இவை அனைத்தும் இன்னும் ஒரு சிறு தொடக்கம் மட்டுமே ஆகும். இந்தியாவில் தற்போதுள்ள கோர்ப்பரேட் – மனுவாதி – சர்வாதிகார ஆர்.எஸ்.எஸ் – பா.ஜ.க அரசாங்கத்தை தோற்கடிக்கும் உடனடி இலக்கை அடைய, மிகவும் விரிவான மற்றும் தீவிரமான கிளர்ச்சி, அரசியல், கருத்தியல் மற்றும் அமைப்பு ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். லெனின் கண்ட கனவான “தொழிலாளர் –விவசாயி கூட்டணி” என்பதை கட்டி எழுப்ப, இந்தியாவில் உள்ள இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகளால் மிகப் பெரிய தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அது மட்டுமே நம் நாட்டில் உண்மையான, புரட்சிகர சமூக மாற்றத்தை கொண்டு வர முடியும்.

**தமிழில்: மன்னை இரா.இயேசுதாஸ்**

# "மத்திய கிழக்கு பிராந்தியமோ, உலகமோ இன்னுமொரு யுத்தத்தை தாங்காது"

மத்திய கிழக்கு பிராந்தியமோ அல்லது இந்த உலகமோ இன்னொரு யுத்தத்தை தாங்காதென, ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் அண்டனியோ குட்ரஸ் (António Guterres) கவலை தெரிவித்துள்ளார்.

01.04.2024 அன்று சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸில் அமைந்துள்ள ஈரானியத்தூதரகத்தின் மீது இஸ்ரேல் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில், ஈரானிய இராணுவ ஜெனரல்கள் உட்பட் 13 பேர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஈரான், 14.04.2024 அன்று சுமார் 300 ஏவுகணைகள் மற்றும் ட்ரோன் குண்டுகளை வீசியது. சுமார் 5 மணி நேரம் நடந்த இந்தத் தாக்குதலில், 99 சதவீத ஏவுகணைகள் மற்றும் ட்ரோன் குண்டுகளை நடுவானில் இடைமறித்து அமெரிக்க, பிரித்தானிய மற்றும் இஸ்ரேலிய படைகள் அழித்ததாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. எனினும் இந்த தாக்குதல் மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்குமென பலரும் அச்சம் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் அவசரக் கூட்டம் 14.04.2024 இல் கூடியது. இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ஐ.நா



பொதுச் செயலாளர் "அமைதியை நிலைநாட்ட வேண்டிய கூட்டுப் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. அது பிராந்திய அமைதியாக இருக்கட்டும் அல்லது சர்வதேச அமைதி, பாதுகாப்பாக இருக்கட்டும். ஆனால் அந்த கூட்டுப் பொறுப்பு இப்போது குறைத்து மதிப்பிடப்படுகின்றது. இந்தத் தருணத்தில் மத்திய கிழக்கு பிராந்தியமோ அல்லது இந்த உலகமோ இன்னொரு போரைத் தாங்காது.

மத்திய கிழக்கு பிராந்தியம் போரின் விளிம்பில் நிற்கிறது. அந்தப் பிராந்திய மக்கள் முழு வீச்சு போரை எதிர்கொள்ளும் அபாயத்தில் உள்ளனர். இத்தருணத்தில் உடனடியாக பதற்றத்தை தணிக்க வேண்டும். இது போரிலிருந்து விலகி நிற்பதற்கான தருணம். பழிக்குப் பழியென இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய பாரிய வான்வழி தாக்குதலைக் கண்டிக்கிறோம். வெறுப்புகளை முன்னெடுக்காமல் நிறுத்துங்கள்.

அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் ஒரு கோரிக்கை விடுக்கிறேன். பிராந்திய ஒருமைப்பாடு அல்லது அரசியல் சுதந்திரத்துக்கு அல்லது ஏதாவதொரு நாட்டுக்கும் எதிராக பலத்தை பிரயோகிக்காதீர்கள். அதேபோல் இஸ்ரேல் – ஹமாஸ் போரை உடனடியாக நிறுத்திவிட்டு எவ்வித நிபந்தனையுமின்றி பிணைக் கைதிகளை விடுவியுங்கள். காஸாவில் மனிதாபிமான அடிப்படையில் உடனடி போர் நிறுத்தத்தைக் கொண்டு வர நமக்குப் பொறுப்புள்ளது.

அங்கு தடையில்லாது மனிதாபிமான உதவிகள் சென்று சேர்வதை உறுதி செய்ய வேண்டும். மேற்கு கரை பதற்றத்தைத் தணிக்க வேண்டும். செங்கடலில் அச்சமற்ற கப்பல் போக்குவரத்து உறுதி செய்யப்பட வேண்டும்" என்றார்.

---

**முன்பக்கத்தொடர்ச்சி...**

இருப்பதாகத் தெரிய வருகிறது.

பொதுஜன பெரமுன நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்தக் கோருவதற்கு சில அரசியல் ரீதியிலான இராஜதந்திரக் காரணங்கள் இருப்பதாகத் தெரிகிறது. அதாவது, நாடாளுமன்றத் தேர்தல் என்று வரும்போது, பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதற்கான சந்தர்ப்பங்களே நிறையவுண்டு. அவ்வாறு நிகழ்ந்தால் அந்தக் கூட்டணியே பெரும்பாலும் வெற்றிபெற்று ஆட்சியமைக்கும். அதிலும் கூட்டணியில் இடம்பெறும் பொதுஜன பெரமுனவே அதிக உறுப்பினர்களைப் பெறும்.

அவ்வாறான ஒரு சூழ்நிலையில் அதன் பின் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ரணில் விக்கிமைசிங்க வெற்றி பெற்றாலும். இப்போது உள்ளது போல பொதுஜன பெரமுனவின் பிடியிலேயே அவர் இருக்க வேண்டி வரும்.

அதுமாத்திரமின்றி, ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாசவோ அல்லது ஜே.வி.பியின் அனுரகுமார திசாநாயக்கவோ ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றாலும், பொதுஜன பெரமுன – ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமே பதவியில் இருக்கும். அப்படியிருக்கும் போது – ஜனாதிபதி ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும், அரசாங்கம் இன்னொரு கட்சியைச் சேர்ந்ததாகவும் இருக்கும் போது ஆட்சியைக் கொண்டு நடத்துவது சிக்கலாக இருக்கும். இதற்கு உதாரணமாக 2000 ஆம் ஆண்டில் சந்திரிக ஜனாதிபதியாகவும், ரணில் பிரதமராகவும் இருந்த நிலைமையைக் குறிப்பிடலாம்.

அது மட்டுமின்றி, ஜனாதிபதியாக யார் தெரிவானாலும், நான்கரை ஆண்டுகள் முடிவதற்கு முன்னர் அரசாங்கத்தை (நாடாளுமன்றத்தை) கலைத்து விடவும் முடியாது. இந்த நிலைமைகளை யோசித்துத்தான் பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தும்படி கோரி வருகிறது என நம்பலாம்.

அதேவேளையில், இந்தக் காரணங்களுக்காகவே ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்த விரும்புகிறார் என எண்ணுவதற்கும் இடமுண்டு. அதாவது, முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி தான் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக வந்துவிட்டால், மற்றவர்களுக்கு மட்டுமின்றி, பொதுஜன பெரமுனவுக்கும் தலைவணங்கத் தேவையில்லை என ரணில் எண்ணுகிறார் போலத் தெரிகிறது.

ஆனால், ரணிலின் இந்தக் கணிப்பு பாதகமாகவும் முடியலாம். ஏனெனில், கடந்த காலத் தேர்தல்களை எடுத்துக் கொண்டால், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ரணிலுக்கும் மக்கள் மத்தியில் செல்வாக்கு இல்லை என்பது தெரிய வந்திருக்கிறது. உதாரணமாக, கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் வென்று ஒரு

உறுப்பினரைக்கூடப் பெறவில்லை. ரணில் கூட தேசியப் பட்டியல் மூலமாகவே நாடாளுமன்றத்தில் பிரவேசிக்க முடிந்தது. அவருக்குக் கிடைத்த சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும், அரசியல் சாசனம் வழங்கிய வாய்ப்பாலும், அந்த ஒரு நியமன உறுப்பினர் பதவியை வைத்துக்கொண்டு நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக வந்துவிட்டார்.

எனவே, அவர் எண்ணுவதின் பிரகாரம் முதலில் ஜனாதிபதி தேர்தலை வைத்து, அதில் போட்டியிட்டு தோல்வியுற்றால் நிலைமை தலைகீழாக மாறிவிடும். எனவே, அவர் அதிக அதிகாரத்துக்கு ஆசைப்படாமல், பொதுஜன பெரமுன சொல்வது போல முதலில் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்தினால், அவரது ஜனாதிபதி பதவி மீண்டும் உறுதி செய்யப்படும். இதுதான் யதார்த்தமான நிலைமை.

இது ஒருபுறமிருக்க, அனுரகுமார திசாநாயக்கவும், சஜித் பிரேமதாசவும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தாம்தாம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையில் இருந்து வருகின்றனர். அதற்குக் காரணம், நாட்டை மாறிமாறி ஆட்சி செய்த இரண்டு பிரதான கட்சிகளிலும் (ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி) மக்கள் நம்பிக்கை இழந்து இருப்பதுதான். ஆனால், அந்தப் பழைய இரண்டு பிரதான கட்சிகளிலிருந்து இரண்டு புதிய கட்சிகள் உருவாகிவிட்டன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதன் காரணமாக அந்தப் பழைய கட்சிகள் இரண்டும் ஏற்கெனவே மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்துவிட்டன.

குறிப்பாக, ஜே.வி.பி. இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தாம்தான் வெற்றி பெறுவோம் எனத் திடமாக நம்புகிறது. ஜனாதிபதித் தேர்தலில் ஒருவர் வெற்றிபெற வேண்டுமானால், வாக்களிக்கும் வாக்குகளில் வெற்றி பெறுபவர் 50 சத வீதத்துக்கு மேல் (குறைந்தது 51 வீதம்) பெற வேண்டும். ஆனால் ஜே.வி.பி. தான் கடந்த காலங்களில் போட்டியிட்ட நாடாளுமன்றத் தேர்தல்களிலோ அல்லது ஜனாதிபதித் தேர்தல்களிலோ, 5 சத வீத வாக்குகள் கூடப் பெற்றதில்லை.

உதாரணமாக, *1982* ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முதன் முதலாக ஜே.வி.பி. தலைவர் ரோகண விஜேவீர போட்டியிட்டு பெற்ற மொத்த வாக்குகள் *4.9* சத வீதம் மட்டுமே. அதேபோல, *1999* ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. சார்பாகப் போட்டியிட்ட நந்தன குணதிலக பெற்ற வாக்குகள் *4.8* சத வீதம் மட்டுமே. இறுதியாக *2019* இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பியின் தற்போதைய தலைவர் அனுரகுமார திசாநாயக்க பெற்ற மொத்த வாக்குகள் *3.16* சத வீதம் மட்டுமே. இந்த நிலைமையில், சராசரியாக 4 சத வீத வாக்கு வங்கியை வைத்திருக்கும் ஜே.வி.பி. 51 சத வீதத்தை எப்படி எட்டிப் பிடிக்க முடியும்? அதிக வாக்குகள் பெறுவது என்பது ரொக்கட்டில் செல்லும் வேகம் போன்றதா?

சில கருத்துக் கணிப்புகளை வைத்துக்கொண்டே ஜே.வி.பி. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தாமே வெற்றி பெறுவோம் என்ற மாயையில் இருக்கின்றனர். ஆனால் அநேகமான நாடுகளில் கருத்துக் கணிப்பை நடத்தும் நிறுவனங்கள் சில அரசியல் நோக்கங்களின் அடிப்படையிலேயே அதைச் செய்கின்றன. அப்படியிருந்தும் பல கருத்துக் கணிப்புகள் தவறாகவே முடிந்திருக்கின்றன. காரணம், கருத்துக் கணிப்பை நடத்துபவர்கள் தமது நோக்கத்துக்கு இசைவான தேர்ந்தெடுத்த நபர்களிடமே கருத்துக் கேட்பதுண்டு. அது மட்டுமின்றி, கருத்துக் கணிப்புகள் எல்லாம் வாக்குகளாக மாறுவதும் இல்லை.

Institute for Health Policy என்ற நிறுவனம் நடத்திய கருத்துக் கணிப்பே ஜே.வி.பியை ‘பப்பா மரத்தில் ஏற்றி’ ஆட்சி அதிகார ஆசையில் அவர்களை மிதக்க வைத்தது. ஆனால் அந்த அமைப்பின் பிந்தைய கருத்துக் கணிப்பே ஜே.வி.பியின் செல்வாக்கு சரிந்து செல்வதை தெரிவிக்கிறது. உதாரணமாக, அந்த நிறுவனம் 2024 பெப்ரவரியில் நடத்திய கருத்துக் கணிப்பில், ஜே.வி.பிக்கு 53 சத வீதமான ஆதரவு இருப்பதாகத் தெரிவித்தது. ஆனால், ஒரு மாதம் கழித்து 2024 மார்ச்சில் நடத்திய கருத்துக் கணிப்பில் ஜே.வி.பியின் செல்வாக்கு *3* சத வீதம் குறைந்து 48 வீதமாக இருக்கிறது எனத் தெரிவித்துள்ளது!

இன்னொரு விடயத்தையும் எடுத்து நோக்க வேண்டும். ஜே.வி.பி. சில வெளிநாடுகள் (இந்தியா 30 கோடி ரூபா கொடுத்ததாகக் கூறப்படுகிறது) கொடுத்த கோடிக்கணக்கான ரூபா பணத்தை வைத்துக்கொண்டு, மதுபானமும் சாப்பாட்டுப் பார்சலும் கொடுத்து ஆட்களை ஏற்றி இறக்கி ‘பிரமாண்டமான’ கூட்டங்களை நடத்தி மக்களுக்கு ‘சோ’ காட்டுகிறது எனக் கூறப்படுகிறது. (இது சாதாரணமாக எல்லா நாடாளுமன்றவாத அரசியல் கட்சிகளும் செய்வதுதான். ஜே.வி.பியும் இப்பொழுது அந்தச் சாக்கடையில் தானே புரள்கிறது) அதேநேரத்தில், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் மற்றைய இரு வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்கவும், சஜித் பிரேமதாசவும் இன்னமும் தமது பிரச்சாரத்தை ஆரம்பிக்கவில்லை என்பதும் கவனத்துக்குரியது. அவர்களே ஜனாதிபதி தேர்தலில் இரண்டு பிரதான வேட்பாளர்கள்.

மற்றொரு விடயம், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றி பெறக்கூடிய சூழலும் இல்லை. அவர் *2019* இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சுமார் 40 சத வீதமான வாக்குகள் பெற்று இரண்டாவதாக வந்தார். அந்தத் தேர்தலில் ரணில் போட்டியிடாதபடியால், ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகளும் சஜித்துக்கே சென்றன. இம்முறை ரணில் போட்டியிடுவதால் ஐக்கிய தேசியக்கட்சி வாக்குகள் சஜித்துக்கு செல்லக்கூடிய வாய்ப்புகள் இல்லை. எனவே, சஜித் 30 வீதமான வாக்குகளைப் பெறுவதே சிரமமாக இருக்கும்.

இப்போதுள்ள சூழ்நிலையில் ரணில் பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் போட்டியிட்டால் அவரே ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறக்கூடிய வாய்ப்புண்டு. ஏனெனில், நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளில் பொதுஜன பெரமுனவுக்கே இன்னமும் கூட மக்கள் மத்தியில் ஆகக்கூடிய ஆதரவு உண்டு. குறிப்பாக, கிராமப்புற சிங்கள மக்கள் மத்தியில்.

இறுதியாக, இன்னொரு முக்கியமான விடயத்தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். சமீபத்தில் நிறுவனமொன்று நடத்திய கருத்துக் கணிப்பில், சுமார் 50 சத வீதமான மக்கள் தாம் எந்தக் கட்சி வேட்பாளருக்கு வாக்களிப்பது என்று இன்னமும் தீர்மானிக்காமல் இருக்கிறார்கள் என்பதே அது.

எப்படிப் பார்த்தாலும், தெரியாத நண்பனை விட, தெரிந்த எதிரிக்கே இறுதியில் மக்கள் வாக்களிப்பர் என்பதுதான் உண்மை. இதுவரை காலமும் அவ்வாறுதான் நடந்து வந்திருக்கிறது.

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# கடனைத் தீர்ப்பதற்கு இலங்கைக்கு தேவை ஒத்துழைப்பேயன்றி சதி பற்றிய கோட்பாடுகள் அல்ல!



இலங்கைப் பிரதமர் தினேஸ் குணவர்த்தன சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சூழ்நிலையில் வெளிநாட்டு ஊடகங்கள் மீண்டும் ஒருமுறை "கடன் பொறி" என்ற கோட்பாட்டை முன்வைத்துள்ளன. ஆனால் இந்தப் பொய் இலங்கையின் பொருளாதாரத்துக்கு நன்மை பயக்கப் போவதில்லை.

இலங்கை இப்பொழுது அபிவிருத்தியிலும் பொருளாதார மீளுருவாக்கத்திலும் ஒரு நெருக்கடிக் கட்டத்தில் இருக்கிறது. அதற்குத் தேவையானது, சீனா உட்பட தனது பங்குதாரர்களுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதேயன்றி, சதிக் கோட்பாடுகளை முன்னெடுப்பது அல்ல.

ஏஎஃபி (AFP) செய்தியின்படி, இலங்கையின் கடன் நிலைமையை சீராக்கி உறுதிப்படுத்துவதற்கு பேச்சுவார்த்தைகளை துரிதப்படுத்தும்படி சர்வதேச நாணய நிதியம் (IMF) இலங்கையைக் கேட்டுக் கொண்டுள்ளது.

நாணய நிதியத்தின் இலங்கைக்கான தலைவர் Peter Breuer கடந்த வாரம் கூறுகையில், "வர்த்தக கடன் வழங்குநர்கள், சர்வதேச பிணையாளர்கள் மற்றும் சீன அபிவிருத்தி வங்கி ஆகியவற்றுடனான இலங்கையின் உடன்பாடு துரிதமான வளர்ச்சியைக் காட்டுவதை நாம் காண்கிறோம்" எனக் கூறியிருக்கிறார்.

சில சர்வதேச ஊடகங்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சீனாவுக்கு அவப்பெயர் உண்டாக்கும் வகையில் மீண்டும் "கடன் பொறி" என்ற கோட்பாட்டைக் கிளப்பி, சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பில் இடைவெளி ஏற்படுத்த முயல்கின்றனர்.

இலங்கை தனது கடன் மறு சீரமைப்பை மேற்கொள்வதற்கு சீனா எத்தகைய உதவியைச் செய்கின்றது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வாங் வென்பின் 2023 ஒக்ரோபரில் கூறுகையில், இலங்கை தனது கடன் பிரச்சினையைக் குறைத்து துரிதமான அபிவிருத்தியை அடைவதற்கு சீனா, சம்பந்தப்பட்ட நாடுகளுடனும், சர்வதேச நிதி நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகக் கூறினார்.

அத்துடன், இலங்கையின் கடன் மறுசீரமைப்பின் முயற்சிகளில் நேர்மையான முறையில் பங்கெடுக்கும்படி சீனா பன்முக நிறுவனங்களிடமும், வர்த்தக கடன் வழங்குநர்களிடமும் கோரியது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு சம்பந்தமாக உலகம் தழுவிய பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போதிலும், இலங்கையின் பொருளாதார மீளுருவாக்கம் பற்றி குறைவான கவனமே செலுத்தப்பட்டுள்ளது. Breuer கடந்த வாரம் கூறுகையில், இலங்கையின் பொருளாதார நிலைமை "படிப்படியாக முன்னேறி" வருகிறது என்றார்.

இந்த சாதகமான வளர்ச்சி ஆறு காலாண்டுகளாக வளர்ந்து, 2023 இன் மூன்றாவது காலாண்டில் 1.6 சதவீத வளர்ச்சியை அடைந்து, நான்காவது காலாண்டில் 4.5 வீதம் ஆகியிருக்கிறது.

இலங்கையில் எதிர்பாராது ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி கடந்த சில வருடங்களில் மக்கள் மீது பெரும் சுமைகளை ஏற்றியிருந்தது.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் வர்த்தகம், சுற்றுலாத்துறை என்பனவற்றில் ஒத்துழைப்பதற்கான பெரும் வாய்ப்புகள் இருப்பதால், அது இலங்கையின் பொருளாதாரம் விரைவாக மீளுருவாவதற்கு உதவியாக அமையும்.

நெருங்கிய ஒத்துழைப்பு என்று கூறுவதன் அர்த்தம், சீனா இலங்கையிடமிருந்து பதப்படுத்தப்பட்ட தேயிலை (Black Tea), இரத்தினக்கற்கள் (Sapphire), வாசனைப் பொருட்கள் (Spices) மற்றும் தைத்த ஆடைகள் (Garments) வாங்குவதும், பதிலாக தொகையான சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அனுப்புவதுமாகும். இது இலங்கையின் பொருளாதாரத்துக்கு புதிய சந்தர்ப்பங்களை வழங்கும்.

கொழும்பு துறைமுக நகரம் (Colombo Port City) சம்பந்தப்பட்ட ஒத்துழைப்புக்கும் பெரிய சந்தர்ப்பம்

தொடர்ச்சி 4ம் பக்கம் பார்க்க...